RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 23 டிசம்பர் 2022 இதழ்:- 35

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

## இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்!

## ஒரு தமிழருக்கும் இடமில்லாத உச்சக்கட்ட பெரும்பான்மை வாதம்! அரசியலமைப்பு பேரவை நியமனம் தொடர்பில் மனோ சீற்றம்!



அரசியலமைப்பு பேரவையில் நியமிக்கப்பட உள்ள ஏழு எம்பிக்களுக்கான நியமனங்களில், ஐந்து சிங்கள எம்பிக்களும், ஒரு முஸ்லிம் எம்பியும் இப்போது பெயரிடப்பட்டுள்ளார்கள். இறுதி ஏழாவது எம்பியாக ஒரு தமிழ் எம்பி இருக்க வேண்டும் என்பது மிக, மிக நியாயமான ஒரு எதிர்பார்ப்பு. ஆனால், இதையும் கூட தட்டி பறிக்க உதயகம்மன்பில (7ம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைகளில் என்ன நடக்கிறது?

இன நெருக்கடிக்குத் தீர்வைக் காண் பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்த அனைத்துக் கட்சிகளின் கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பில் நடைபெற்றிருக்கின்றது. பலத்த ஆரவாரங்களுடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, காணிப் பிரச்சினை போன்ற அன்றாடப் பிரச்சினைகளுக்கு ஜனவரி 31க்கு முன்னதாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (16ம் பக்கம் பார்க்க)



## இலங்கைத்தீவு மீதான இந்தியாவின் நகர்வு! நிரந்தரமான வெற்றியைக் கொடுக்குமா?



கடந்த இரு மாதங்களுக்கு மேலாக இலங்கை - இந்திய இராஜீக உறவில் நிலவிய விரிசல் சுமுகமாக மாறுகிறதா என்ற கேள்வி நியாயமானதாகவே உள்ளது. குறிப்பாக இலங்கையின் அரசியலில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் (20ம் பக்கம் பார்க்க)

## Vaughan நகரில் 5 பேரை சுட்டுக் கொன்ற 73வயது முதியவர்

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் 5 பேரை சுட்டுக்கொன்ற துப்பாக்கிதாரி (4ம் பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


WISHING YOU AND YOUR FAMILY A JOYFUL

## Holiday Season and a Prosperous year 2023

**Thank you** to all of my clients, family, and friends for trusting me with your Real Estate needs during the last 20 years.

*I hope to continue working with you in the future.*

**Mississauga /Sandalwood**



**Brampton** **$677,000**
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen

**Dixie & Clark**





**Brampton** **$539,900**
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded

**Sheppard & Warden**




**Scarborough** **$595,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony

**Mccowan/Hwy 401**




**Scarborough** **$599,900**
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl

**Eglinton & Mccowan**




**Scarborough** **$620,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!

**Birchmount & Enterprise**




**Markham** **$699,900**
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen

**Sandalwood Pkwy/Hurontario**





**Brampton** **$839,000**
Bedrooms: 3 Washrooms: 2
Location Location

**Simco St N/ Darcy**



**Oshawa** **$998,000**
Bedrooms: 3+1 Washrooms: 4
Fully Renovated Home

**Williams Pkwy/James Potter**



**Brampton** **$1,699,900**
Bedrooms: 4+2 Washrooms: 4
Upgraded Large Kitchen

**Markham & Major Mackenzie**



**Markham** **$1,649,000**
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space

**Salem / Taunton**




**Ajax** **$1,189,800**
Bedrooms: 4+1 Washrooms: 4
Location Location Location!

**Don Mills/Eglinton**




**Scarborough** **$549,900**
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு 10 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்கள் கனடியத் தமிழர்களால் நன்கொடை!

கனடியத் தமிழர்கள் பத்து மில்லியன் ரூபா பெறுமதியான உயிர் காக்கும் மருந்துகளைத் தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலைக்கு நன்கொடை யாக வழங்கியுள்ளனர். கனடியத் தமிழர் பேரவை, ஆண்டு தோறும் நடாத்தும் நிதிசேர் நடை பவனி ஊடாகப் பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடை களை வழங்கி வருகின்றது.

இலங்கையின் மோசமான பொருளாதாரச் சரிவால் உயிர் காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர்கொண்டு வருகின்றன. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் 2022 செப்ரெ ம்பர் மாதம் 11ஆம் தேதி கனடியத் தமிழர் பேரவையினரால் பதினான்காவது வருடாந்த தமிழ்க் கனடிய நிதிசேர் நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் திரட்டப்படும் நன்கொடை மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தி யங்களில் உள்ள ஆறு மருத்துவமனை களுக்கு உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் வழங்குவதெனத் திட்டமிட ப்பட்டது.




இந்த நன்கொடையின் முதற் கட்டமாக கனடியத் தமிழர் பேரவையினால் ஒழுங்க மைக்கப்பட்ட முதல் தொகுதி மருந்து ப்பொருட்கள் செவ்வாய்க்கிழமை 20 ஆம் தேதி, மாலை 4:30 மணியளவில் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்திய சாலைக்குக் கையளிக்கப்பட்டது.

கனடியத் தமிழர் பேரவையின் முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர் சிவம் வேலுப்பிள்ளை, சிவபூமி அறக்கட்டளை யின் நிறுவனர் கலாநிதி ஆறு திரு முருகன், யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) கலாநிதி ஏ.கேதீஸ்வரன், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் ஆர்.சுரேந்திர குமரன், தெல்லிப்பளை புற்றுநோய் வைத் தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் சி.ஹரிஹரன், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் இடம் பெற்ற மருந்து களை வழங்கும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

எதிர்வரும் வாரங்களில் ஏனைய ஐந்து மருத்துவமனைகளுக்குமான நன் கொடைகள் கனடிய தமிழ் காங்கிரஸி னால் ஒழுங்கமைக்கப்பட்டு கையளிக் கப்படும்.

# அரைகுறைத் தீர்வை ஏற்கத் தயாரில்லை! சொல்ஹெய்மிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு!



சர்வதேச காலநிலை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல் ஹெய்ம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சா ளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை 19 டிசம்பர் 2022 சந்தித்து கலந்துரையாடி யுள்ளார். இதன்போது தமிழர் அரசியல் பிரச்சினை உள்ளிட்ட நாட்டின் தற்போ தைய நெருக்கடி நிலைமைகள் குறித்து இந்த சந்திப்பில் விரிவாக கலந்துரை யாடப்பட்டுள்ளது.

இதன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு தருவதாக இருந்தால், அந்தத் தீர்வு எமது மக்கள் விரும்பும் சமத்துவம், ஒற்றுமை மற் றும் பாதுகாப்பு நிறைந்ததாகக் காணப் பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந் தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும் கோரிக்கைக்கு அமைவாக இந்தச் சந்திப்பு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இதன் போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறி னார்.

சந்திப்பின் போது தற்போது ஆரம்பிக் கப்பட்டுள்ள சர்வகட்சி பேச்சுத் தொடர்பி லேயே அதிக நேரம் கலந்துரையாடப் பட்டது. மேற்படி சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

'புதிய அரசமைப்பு விடயம் தொடர்பில் எரிக் சொல்ஹெய்முடன் பொதுவாகப் பேசினோம். விசேடமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆரம்பித்துள்ள பேச்சு, தமிழ்த் தேசியப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் ஆராய்ந்தோம். ஜனாதிபதி, தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு தருவதாக இருந்தால் அந்தத் தீர்வு எமது மக்கள் விரும்பும் சமத்துவம், ஒற்றுமை மற்றும் பாதுகாப்பு நிறைந்த தாகக் காணப்பட வேண்டும். அப்படி யான தீர்வையே நாம் மனதார ஏற்றுக் கொள்வோம் என்று சொல்ஹெய்மிடம் தெரிவித்தேன்' என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந் திரன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதய சுத்தியுடன் நடவடிக்கை எடுக்கப்பட் டால் நாம் ஆதரவு வழங்குவோம். அரை குறைத் தீர்வை ஏற்பதற்கு நாம் ஒரு போதும் தயாரில்லை என்பதைச் சொல் ஹெய்மிடம் சுட்டிக்காட்டினோம் என் றார்.


இதேவேளை ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஒத்துழை ப்பு வழங்கும் என நோர்வேயின் முன் னாள் சமாதான தூதுவர் எரிக் சொல் ஹெய்மிடம் உறுதியளித்துள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜய வர்தன தெரிவித்தார்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காண நடை முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் முன்னேற்றகரமானதாக உள்ளது. இதனை சர்வதேசம் உன்னிப் பாக அவதானித்து வருகிறது என எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டார். காலஞ் சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் ஜயலத் ஜயவர்தன தமிழ் மக்களு டன் இனக்கமாக செயற்பட்டதை எரிக் சொல்ஹெய்ம் நினைவுப்படுத்தினார். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**





# Vaughan நகரில் 5 பேரை சுட்டுக் கொன்ற 73வயது முதியவர்

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் 5 பேரை சுட்டுக் கொன்ற துப்பாக்கிதாரி 73 வயது முதியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். ஒன்ராறியோ மாகாணத்தில், ரொறன்ரோவுக்கு 18 மைல் வடக்கே அமைந்துள்ள **Vaughan** நகரில், ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென மர்ம நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்தில், ஐந்து பேர் கொல்லப்பட்டனர். தாக்குதல்தாரி பொலிசார் மீதும் தாக்குதல் நடத்திய நிலையில், பொலிசாருடனான மோதலில் தாக்குதல்தாரி சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நிலையில், தாக்குதல் நடத்திய துப்பாக்கிதாரியின் அடையாளத்தை பொலிஸார் வெளியிட்டனர். புறநகர் ரொறன்ரோ காண்டோமினியம் கட்டிடத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தி ஐந்து பேரைக் கொன்ற நபர் 73 வயதான பிரான்செஸ்கோ வில்லி என பொலிஸார் தெவித்தனர்.








பிரான்செஸ்கோ வில்லி, தனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் தனக்கு அநீதி இழைத்ததாக உணர்ந்த காண்டோ வாரிய உறுப்பினர்களை பழிவாங்க வன்முறை வெறியாட்டத்தை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வில்லி 2020ல் வாரியத்தின் ஆறு இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார், குழு உறுப்பினர்கள் '2010 முதல் குற்றம் மற்றும் குற்றச் செயல்களைச் செய்தார்கள்' என்று குற்றம் சாட்டினார். இறந்தவர்களில் மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் அடங்குவர், அவர்களில் மூன்று பேர் காண்டோ வாரிய உறுப்பினர்கள். மற்றொரு பெண் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# கனடிய கோடீஸ்வரத் தம்பதிகளின் கொலை தொடர்பான குற்றவாளியைக் கண்டு பிடிக்க 35 மில்லியன் டொலர்கள் சன்மானம் கொடுக்கும் குடும்பத்தினர்!


கனடாவில் வாழ்ந்து வந்த கோடீஸ்வர தம்பதியர் பேரி ஷெர்மன் (*Barry Sherman*) (வயது 75) மற்றும் ஹனி (*Honey*) (வயது 70) இருவரும் கடந்த 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி கதிரையில் கட்டி போடப்பட்ட நிலையில், மர்மமான முறையில் இறந்து கிடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேரி ஷெர்மன் மற்றும் அவரது மனைவி ஹனி ஆகியோரின் மரணம் குறித்து கடந்த 5 ஆண்டுகளாக எந்தவித துப்பும் கிடைக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. கனடாவின் பெரும் பணக்கார குடும்பத்தை சேர்ந்த தம்பதியர், மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம், அந்த சமயத்தில் அப்பகுதி முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது. அவர்களின் இறுதி அஞ்சலிக்கு ஏராளமானோர் கலந்து கொண்டிருந்த சூழலில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் கலந்து கொண்டிருந்தார். இதனையடுத்து, பேரி ஷெர்மன் – ஹனி தம்பதியர் மர்மமான முறையில் இறந்து போனமை தொடர்பாக காவல்துறையினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

ஆரம்பத்தில் அவர்கள் இருவரும் தற்கொலை செய்து கொண்டதாக காவல்துறையினர் அறிவித்திருந்தனர். ஆனால், பிரேத பரிசோதனை அறிக்கையில் பேரி மற்றும் ஹனி ஆகியோர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரிய வந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் இருவரும் இறந்து ஐந்து ஆண்டுகள் கடந்தாலும் இதற்கான காரணம் யார் என்பது பற்றி இன்னும் எந்த தகவலும் கிடைக்கவில்லை. இந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் யார் என்ற விஷயம் மர்மமாகவும் நீடித்து வருகிறது. இந்த நிலையில் தான், பேரி ஷெர்மன் – ஹனி தம்பதியரின் மகன் மற்றும் குடும்பத்தினர், அவர்களின் ஐந்து ஆண்டு நினைவு



அஞ்சலியை முன்னிட்டு அண்மையில் பொது அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதன்படி, பேரி மற்றும் ஹனி (22ம் பக்கம் பார்க்க)

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

கனடா முத்துமாரியம்மன்

அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

22 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா முத்துமாரியம்மன் கலாச்சார மண்டபத்தில் மாலை 2 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

25 டிசம்பர் 2022 ஞாயிறு மாலை ஐயப்பன் நெய் நிரப்புதல் பூஜை நடைபெறும். உபயம்: தணிகை மயில் குடும்பம்

28 டிசம்பர் 2022 புதன் அதிகாலைசூரிய உதயத்தின் முன் திருவெம்பாவை பூஜை ஆரம்பம்.

08 டிசம்பர் 2022 வியாழக்கிழமை:- விநாயகர் சஷ்டி விரதம் நடைபெறுகின்றது.

பிள்ளையாருக்கு பூஜை செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

28 டிசம்பர் 2022 புதன் இரவு விநாயக சஷ்டி (பிள்ளையார் கதை) விரதம் பூர்த்தி.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சிறந்த வழிமுறையாக சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம் -எரிக்

இலங்கையின் அரச ியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சிறந்த வழிமுறையாக சர்வக்கட்சி தலைவர் கூட்டம் காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களை நெருக்கடி நிலையில் இருந்து மீட்பதற்கு சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுப்பட தயாராகவுள்ளேன் என சர்வதேச காலநிலை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

உத்தியோகப்பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்ம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார நெருக்கடி மற்றும் பசுமை நிலைபேறான திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளேன்.

இலங்கைக்கு காற்றாலை மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் முன்னேற்றத்திற்காக புதிய முதலீடுகளை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வாரம் அரசியல் கட்சி தலைவர்களுடன் இடம் பெற்ற சர்வக்கட்சி தலைவர் கூட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எனக்கு தெளிவுப்படுத்தினார். இலங்கையின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணும் முக்கிய செயற்பாடாக சர்வக்கட்சி தலைவர் கூட்டம் காணப்படுகிறது.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழி தமிழர்கள், மேல்நாட்டு தமிழர்கள் மற்றும் சிங்கள,முஸ்லிம் சமூகத்தினருடன் அமைதியான முறையில் வாழும் அபிலாசையை அவர் தெளிவுப்படுத்தினார். அத்துடன் இலங்கையில் ஏழ்மை நிலையில் வாழும் பெருந்தோட்ட மக்களுக்கான உணவு மற்றும் ஏனைய சேவை விநியோகம் தொடர்பில் இந்த சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது.



மிக மோசமான நிலையில் வாழும் இலங்கை மக்களை நெருக்கடி நிலையில் இருந்து மீட்பதற்கு என்னால் இயலுமான ஒத்துழைப்பை வழங்குவேன். நாட்டில் பெரும்பாலானோருக்கு உணவு பற்றாக்குறை காணப்படுவதாகவும்,ஒரு சிலர் உணவை உட்கொள்ளும் வேளையை குறைத்துக் கொண்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. இந்நிலையில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட தயாராக உள்ளேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள ஜனாதிபதி பாரிய முயற்சிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துள்ளார். பொருளாதாரத்தை மீட்சிப்படுத்தும் திட்டங்கள் வெற்றி பெற்றால் அது அனைவருக்கும் பயனுடையதாக அமையும் என்றார்.

# தமிழர் விடுதலையை நேசிக்கும் கட்சிகளை ஒன்றிணைத்து இந்தியாவின் அனுசரணையுடன் பேச்சு நடத்த வேண்டும்



தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றி பேசுவதாயின் தமிழர்களின் விடுதலையை நேசிக்கும் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வதேச நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கை அரசுடன் பேச வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் 75ஆவது ஆண்டு ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு தலைமையுரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கைக்கு 1948 ஆம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் வழங்கப்பட்டு இருக்கின்ற போதும் தமிழர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது இலங்கையில் தமிழர்கள் ஆட்சி செய்த நிலங்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. அது சிங்களவர்களுக்கு கிடைத்துள்ளது.

தமிழ் மக்கள் சுதந்திர தமிழர்களாக இருக்க வேண்டும் என்றும் அதற்காகவே அன்று 1948ஆம் ஆண்டிலேயே தந்தை செல்வா தனது அஹிம்சை வழியிலான போராட்டத்தை ஆரம்பித்து ஆரம்பித்திருந்தார். அதன் 75 ஆண்டுகள் நிறைவடைகின்றது என்று குறிப்பிட்ட அவர், இலங்கையில் தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி சிதைந்து தேசிய பட்டியலில் பாராளுமன்றத்துக்கு சென்று பிரதமராகி ஜனாதிபதியாகி இருக்கின்றார். இந்த நிலையில், பேச்சு வார்த்தை மூலம் தமிழர்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அழைத்திருக்கின்றார். தமிழ் மக்களுடைய விடுதலையை நேசிக்கின்ற ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வதேச நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் அனுசரணையுடன் பேச வேண்டும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கு உரையாற்றிய சிறிதரன் எம்.பி தமிழர்களது சுதந்திரத்தை பறித்து அவர்களின் இறமையை பறித்து இலங்கையில் தமிழர்களது உரிமைகளையும் சேர்த்து பிரித்தானிய அரசால் இலங்கைக்கான சுதந்திரமாக 1948ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

அதற்கு எதிராக அந்த அநியாயங்களுக்கு எதிராக ஒரு விடுதலைப் பயணத்தை ஆரம்பித்தவர் தந்தை செல்வா 1948இல் முதலாவது களம் அமைக்கப்பட்டு தமிழர்களுக்கான ஒரு அரசு வேண்டும் அந்த அரசு எவ்வாறு அமைய வேண்டும் என்ற ஒரு தீர்க்கதரிசன சிந்தனையோடு தனது பயணத்தை ஆரம்பித்தார். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 75 ஆண்டுகள் என்றால் எங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைகின்றது எனவேதான் இரண்டும் சமதராசில் வைத்து பார்க்கப்பட வேண்டிய விடயங்களாக நோக்கப்படுகின்றது. மிக முக்கியமாக தந்தை செல்வாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் 1949ஆம் ஆண்டிலேயே தமிழரசு கட்சியின் பதிவுகளுக்கான அங்குரார்பன நிகழ்வில் அவர் ஆற்றிய உரை இலங்கையில் ஒரு சமஸ்டி முறையிலான ஆட்சி முறை உருவாக்கப்பட வேண்டும். அது இலங்கையில் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் பாதிக்காது. இந்த சமஷ்டி தீர்வானது சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் காப்பாற்றிக் கொள்ளும் ஒரு தீர்வாக சமஷ்டி அமையும் என்ற வார்த்தைகளை குறிப்பிட்டிருந்தார். நாங்கள் எந்த மண்ணில் இருந்து எங்களுடைய உரிமைகளுக்காக பேசினோமா செய்திகளை சொன்னமோ அதை அந்த இடத்தில் இருந்து இந்த வீர மண்ணிலே இருந்து நாங்கள் இந்த பவள விழாவுக்கான தொடக்கத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

# கஜேந்திரகுமாரிடமுள்ள மாற்று வழி என்ன?

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் ஜனாதிபதி. இதில் எவருக்குமே சந்தேகங்கள் இருக்காது. ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வைக் காணப் போவதாகக் கூறுகின்றார். அவர் எவ்வாறான உள்நோக்கங்களையும் கொண்டிருக்கலாம் அது வேறு விடயம். ஆனால், அவரோ பேசுவதற்கு கட்சிகளை அழைக்கின்றார். கூட்டமைப்பும் பங்கு கொண்டு அதன் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றது. இதில் பங்கு கொள்ளாமலும் விடலாம். அவ்வாறாயின், அடுத்த கட்ட வேலைத் திட்டத்தை முன் வைக்க வேண்டும். அவ்வாறானதொரு வேலைத்திட்டம் எவரிடமும் இல்லை.

எவ்விதமான நிபந்தனையும் இல்லாமல் பேச்சில் பங்கு கொண்டமையானது துரோகமென்று கஜேந்திரகுமார் வாதிடுகின்றார். விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தோடு கூட்டமைப்பை ஒப்பிட்டிருக்கின்றார். முதலில் இது ஒரு பேச்சே அல்ல. இங்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்களுக்கான இறுதித் தீர்வு தொடர்பில் பேசப்படவுமில்லை. பேச்சு தொடர்வதாயின் அரசாங்கம் அதன் நம்பகத் தன்மையை நிரூபிக்க வேண்டுமென்னும் வகையிலேயே பேசப்பட்டிருக்கின்றது.

கூட்டமைப்பு முன்னெடுக்கும் ஒவ்வொரு விடயங்களையும் எதிர்ப்பதன் மூலம் தங்களின் தேர்தல் அரசியலை முன்னெடுப்பதையே கஜேந்திரகுமார் பிரதான அரசியலாகக் கொண்டிருக்கின்றார். ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பிய போதும் கூட, அதற்கு எதிரான பிரசாரங்களையே முன்னெடுத்திருந்தார். அதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு தங்களின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

பல தசாப்தங்களுக்கு முன்னர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸை எதிர்த்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் எவ்வாறு செயல்பட்டாரோ அவ்வாறானதோர் அணுகுமுறையையே இப்போது கஜேந்திரகுமார் முன்னெடுத்து வருகின்றார். இது ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி அரசியல் அணுகுமுறை போன்ற ஒன்றாகும். கூட்டமைப்பு எண்ணிக்கையில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருப்பதால், அதுவொரு பிரதான தமிழ்த் தேசிய தரப்பாக இருக்கின்றது. இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இருக்கும் கஜேந்திரகுமார் தரப்பு கூட்டமைப்பின் அரசியல் தீர்மானங்களை எதிர்ப்பதன் மூலம், அதிக பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்ற முயற்சிக்கின்றது. இது அடிப்படையில் பழைய காங்கிரஸ் – தமிழரசு கட்சி முரண்பாட்டை புதிய தலை முறையில் முன்னெடுக்கும் ஓர் உபாயமேயன்றி இதில் எந்தவோர் உன்னதமான அரசியல் நோக்கமும் ,ல்லை.

ரணில் விக்கிரமசிங்க சமஷ்டி தீர்வை பகிரங்கமாக ஆதரித்தால் தான் தாம் பேச்சில் பங்குகொள்வோமென்று கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார். இது ஒரு போதுமே நடக்கும் விடயமல்ல என்பதைத் தெரிந்தே கஜேந்திரகுமார் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். ஏனெனில், ரணிலோ அல்லது பிறிதொரு சிங்கள அரசியல் கட்சியின் தலைவரோ அவ்வாறானதோர் அறிவிப்பை ஒருபோதுமே முன்வைக்கப் போவதில்லை.

ஏனெனில், அதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல் தமிழர் பக்கத்தில் இல்லை. அது விடுதலைப் புலிகள் அமைப்பிடம் இருந்தது. ஏனெனில், விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ பலத்தின் அடிப்படையில் தான் பேச்சுக்கு சென்றிருந்தது. எனவே, அந்த அமைப்புடன் ஏனையவர்களை ஒருவர் ஒப்பிடுவாரானால் அது அவரின் அரசியல் முதிர்சியின்மையின் அடையாளமாகவே நோக்கப்படும்.

கூட்டமைப்பின் கடந்தகால அணுகுமுறைகளில் பல தவறுகள் உண்டு. ஆனால், இம்முறை சில விடயங்களில் கூட்டமைப்பு நிதானமான அணுகுமுறையைக் காண்பித்திருக்கின்றது. சமஷ்டி அடிப்படையில் பேச்சு என்று கூறி, தொடர்ந்தும் கொழும்பின் தந்திரோபாயத்துக்கு சிக்குப்பட்டதே இது வரையான (கடந்த 13வருடங்களாக) கூட்டமைப்பின் அணுகுமுறையாக இருந்தது. ஆனால், இம்முறை ரணிலின் அழைப்பை பழைய அணுகுமுறைகளுக்கு மாறாகவே கையாண்டிருக்கின்றது. பேச்சுக்கான புறச்சூழலை ஏற்படுத்தும் நோக்கில் சில முன்னேற்பாடுகளை நிரூபிக்குமாறே கூட்டமைப்பு கோரியிருக்கின்றது. ரணிலின் நகர்வுகளை அவதானித்து, அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்கலாம் என்பதே கூட்டமைப்பின் அணுகுமுறையாகும். இவ்வாறனதோர் அணுகுமுறையை கைக்கொள்ளுமாறே புத்திஜீவிகளும் கூட்டமைப்பின் மீது அழுத்தங்களை பிரயோகித்து வந்தனர்.(22ம் பக்கம் பார்க்க)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம்! திரும்பிச் சென்ற ஓம்பி அலுவலக ஆணையாளர்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் (ஓம்பி) 20 டிசம்பர் 2022 அன்று மேற்கொள்ளப்பட இருந்த பதிவு விசாரணை நடவடிக்கைகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் விசாரணை நடவடிக்கை இடம்பெறுவதற்காக காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர்கள் மூன்று பேர் மற்றும் அதன் அலுவலக உத்தியோகத்தர்கள் வருகை தந்து பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் விசாரணை நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஓம்பி அலுவலகம் ஒரு கண்துடைப்பு நாடகம் எங்களை ஏமாற்ற இவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம் இழப்பீடோ நட்டஈடோ எமக்கு வேண்டாம் முறையான நீதி விசாரணையே வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமல் அக்கப்பட்டவர்களின் உறவினர்களோடு போராட்டம் இடம் பெறும் இடத்துக்கு வருகை தந்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த ஓம்பி அலுவலக ஆணையாளர்கள் பதிவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய



வேண்டும். அதன் பின்னர் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் ஆகவே இன்றைய பதிவு நடவடிக்கையில் ஓம்பி கலந்து கொண்டு உங்கள் விபரங்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுகொண்டனர்.

இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எத்தனை தடவை பதிவுகளை விசாரணைகளை எத்தனை ஆணைக்குழுக்களிடம் முன் வைத்துள்ளோம் எல்லாமே ஏமாற்று வேலை ஆகவே இவ்வாறு பதிவு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என கேட்டு கொண்டனர் . அதன் பின்னர் தாம் பதிவு நடவடிக்கை விசாரணை என்பனவற்றை நிறுத்துவதாக தெரிவித்த ஓம்பி அலுவலக ஊழியர்கள் மீண்டும் மாவட்ட செயலகத்துக்குள் சென்றுள்ளனர்.

போராட்டம் இடம்பெற்று கொண்டிருந்த வேளை 20க்கும் மேற்பட்ட புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை புகைப்படம் எடுத்தும் கண்காணிப்பில் ஈடுபட்டும் இருந்தனர்.

# மாவீரர் தினம், திலீபன் நினைவேந்தல் கொண்டாடியமையால் பாதீட்டுக்கு ஈ.பி.டி.பி. எதிர்ப்பு! மணிவண்ணன் பதவி இழப்பாரா?

யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணனின் ஏற்பாட்டில் மாவீரர் நாள் நிகழ்வுகள் மற்றும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டமையினால் ஈழமக்கள் ஜனநாயக கட்சி பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது


யாழ்ப்பாண மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு 21 டிசம்பர் 2022 சபையில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு இடம் பெற உள்ள நிலையில் இன்று மாலை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் கட்சி தலைமைக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது நாளைய பாதீட்டினை எதிர்ப்பு வாக்களிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வரின் இரண்டு பாதீடுகள் தோற்கடிக்கப்பட்டமையினால் புதிய முதல்வர் தெரிவு இடம் பெற்ற நிலையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பூரண ஆதரவுடன் யாழ்மாநகர முதல்வராக மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் 2023 பாதீட்டிற்கு ஈபிடிபி எதிர்த்து வாக்களிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# ஒரு தமிழருக்கும் இடமில்லாத உச்சக்கட்ட பெரும்பான்மை வாதம்! அரசியலமைப்பு பேரவை நியமனம் தொடர்பில் மனோ கணேசன் சீற்றம்!

அரசியலமைப்பு பேரவையில் நியமிக் கப்பட உள்ள ஏழு எம்பிக்களுக்கான நியமனங்களில், ஐந்து சிங்கள எம்பிக் களும், ஒரு முஸ்லிம் எம்பியும் இப்போது பெயரிடப்பட்டுள்ளார்கள். இறுதி ஏழாவது எம்பியாக ஒரு தமிழ் எம்பி இருக்க வேண்டும் என்பது மிக, மிக நியாயமான ஒரு எதிர்பார்ப்பு. ஆனால், இதையும் கூட தட்டி பறிக்க உதயகம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரின் உத்தர சபை கட்சி முயல்கிறது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவை நியமனங் களில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியதாவது அந்த நியமனம் உதய கம்மன்பில எம்பிக்கு வழங்க வேண் டும் என அந்த கட்சி பிடிவாதம் பிடிக் கிறது. இது உச்சக்கட்ட பெரும் பான்மைவாதம். திருத்த முடியாத திமிர்வாதம். இதை எதிர்த்து முறியடி ப்பதில், தமிழ் தேசிய கூட்டமைப்பு டன், தமிழ் முற்போக்கு கூட்டணி, இரட்டை குழல் துப்பாக்கியாக இணைந்து செயற்படும்.

அரசியலமைப்பு பேரவையில் சட்டப் படி பத்து உறுப்பினர்கள் இடம்



பெறுவார்கள். அதில் ஏழு எம்பிக் களும், மூன்று சிவில் சமூக செயற் பாட்டாளர்களும் இடம் பெற வேண் டும். இந்த எம்பிகளில், நான்கு சிங்கள எம்பிகளும், தலா ஒரு எம்பியாக மூன்று எம்பீக்கள், வடகிழக்கு தமிழர், முஸ்லிம்கள், இலங்கை இந்திய தமிழர் ஆகியோரை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இதுவே நியாயமான நடவடிக்கை. ஆனால், இது நடை பெறவில்லை. சபாநாயகர், பிரதமர், எதிர்கட்சி தலைவர் ஆகிய மூவரும் தம் பதவிநிலை காரணமாக அரசியல மைப்பு பேரவையில் இடம் பெறுகின் றார்கள். ஜனாதிபதியும், எதிர்கட்சி தலைவரும் தம் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். இதன்படி ரணில் விக்கிரமசிங்க, தமது பிரதிநிதியாக எம்பி நிமல் சிறிபால சில்வாவையும், சஜித் பிரேமதாச தமது பிரதிநிதியாக எம்பி கபீர் ஹசீமையும் நியமித்து ள்ளனர்.

அரசாங்கம், பிரதான எதிர்கட்சி ஆகிய கட்சிகளை சாராத சிறுகட்சிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். அதன்படி, சித்தார்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரேரித்துள்ளது. இப் போது இதுவே பிரச்சினையாக மாறி யுள்ளது.

மொட்டு கூட்டணியில் தெரிவாகி விட்டு, அரசாங்கங்கத்தின் எல்லா தவறுகளுக்கும் காரணமாகி விட்டு, இப்போது எதிர்கட்சி பக்கத்தில் வந்து உட்கார்ந்துள்ள உதயகம்மன்பில, விமல் வீரவன்ச கும்பல், இதையும் தட்டி பறிக்க பார்க்கிறது.

உண்மையில், இந்த விவகாரத்தில் மலையக இந்திய வம்சாவளி தமிழரே முதலில், அநீதிக்கு உள்ளாக்கப்பட் டார்கள். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோ ரிடம், அவர்கள் நியமிக்கும் எம்பியாக இந்திய வம்சாவளி தமிழரை பிரதிநித் துவம் செய்யும் ஒரு எம்பியை நிய மிக்கும்படி, நானும், எம்பி பழனி திகாம்பரமும் கோரிக்கை விடுத்தோம்.

தான் ஏற்கனவே, எம்பி நிமல் சிறிபால சில்வாவை பெயரிட்டு விட்டதாகவும், முதலிலேயே கூறி இருந்தால், பரிசீலி க்க (9ம் பக்கம் பார்க்க)

# கோட்டா நியமித்த ஜனாதிபதிச் செயலணியைக் கலைத்த ரணில்?

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்க ான ஜனாதிபதி செயலணியை, தற் போதைய ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க கலைத்துள்ளார். என்ன நடந் தது?

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் றிப்தி அலி சமர் பித்த விண்ணப்பத்துக்கு ஜனாதிபதி செயலகம் வழங்கிய பதிலில் இவ் விடயம் தெரிய வந்துள்ளது. குறித்த செயலணியை 2020ஆம் ஆண்டு ஜீன் 2ஆம் தேதி அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நியமித்தார். அப்போதே இந்த நடவடிக்கைக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட னர்.

தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்ப ான்மையான வாழும் கிழக்கு மாகா ணத்துக்கென அமைக்கப்பட்ட அந்தச் செயலணியில், சிங்களவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக ஆரம்பத் தில் நியமிக்கப்பட்டமையே, அந்த எதிர்ப்புக்கு பிரதான காரணமாக அமைந்தது. இதையடுத்து, அந்த செயலணியில் தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் உறுப்பினர்களாக பின்னர் சேர்க்கப்பட்டனர்.

'தொல்பொருள் உள்ள இடங்கள்' எனத் தெரிவித்து, சிறுபான்மை மக்களின் காணிகளை அபகரிக்கும் நடவடிக் கைகளில் அரசு ஈடுபடுவதாக தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகின்றமையின் காரணமாக, கிழக்கு மாகாண தொல் பாருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயல ணியை தேவையற்ற ஒன்றாகவே சிறுபான்மை மக்கள் கருதினர்.

இந்த நிலையிலேயே கடந்த ஆகஸ்ட் 22ஆம் தேதி, மேற்படி செயலணியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முடிவுறுத்தியுள்ளதாக, தனது விண் ணப்பத்துக்கு வழங்கப்பட்டுள்ள பதி லில் ஜனாதிபதி செயலகம் தெரிவித் துள்ளதாக, பிபிசி தமிழிடம் ஊடக வியலாளர் றிப்தி அலி கூறினார்.

இது தொடர்பில் அந்த செயலணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழு த்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக வும், ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.கே. ஹேனாதீர அந்தப் பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த விகாரைகளை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபட்ட செயலணி இந்த செயலணி செயற்பட்ட காலப் பகுதியில், தீகவாபி ரஜ மகா விகாரை மற்றும் லூஹகலயிலுள்ள நீலகிரி பௌத்த விகாரை ஆகியவற்றின் தூபி களை நிர்மாணிப்பதற்கான நடவடி க்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொத்துவில் முகுது மஹா பௌத்த விகாரைக்குரிய காணிகள் தொடர்பான சிக்கல்களை தீர்த்து வைக்கும் செயற்பாடுகளிலும், இந்த செயலணி ஈடுபட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியை ரணில் விக்ரமசிங்க கலைத்துள்ள நிலையில், அதற்கென வழங்கப்பட்ட கடமைகள் அனைத் தும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வெளியிடப்பட்ட 2289:.43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம், குறித்த கடமைகள் மேற்படி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் செயற்பட்டு வந்தபோதும், ஜனாதிபதிக்கு எதுவித அறிக்கை களையும் இந்தச் செயலணி சமர்ப் பிக்கவில்லை.

பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன தலைமையில் செயற்பட்ட கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை களை முகாமை செய்வதற்கான ஜனாதி பதி செயலணியின் உறுப்பினர்கள் எவருக்கும் சம்பளமோ, கொடுப்பனவு களோ தம்மால் வழங்கப்படவில்லை எனவும், ஜனாதிபதி செயலகம் தெரிவித் துள்ளது.

கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற் கான ஜனாதிபதி செயலணியின் உறுப் பினர்களாக பின்வருவோர் நியமிக்கப் பட்டனர்.

1. ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன - செயலாளர் பாதுகாப்பு அமைச்சு (செயலணியின் தலைவர்)

2. எல்லாவல மேதானந்த நாயக்க தேரர்



3. பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர்

4. வென்டறுவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரதன பால உபாலி அபிதான அனுநாயக்க தேரர் (அஸ்கிரிய பீடம்)

5.கலாநிதி பஹமுணே சுமங்கல நாயக்க தேரர் (பதிவாளர் - மல்வத்து பீடம்)

6.கலாநிதி மெதகம தம்மானந்த நாயக்க தேரர் (பதிவாளர் - அஸ்கிரிய பீடம்)

7. கலைமாணி அம்பன்வெல்லே ஸ்ரீ சுமங்கல தேரர் (நிருவாக உறுப்பினர் - மல்வத்து பீடம்)

8. பேராசிரியர் கபில குணவர்த்தன (செயலாளர் - புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு)

9. சிரேஷ்ட பேராசிரியர் அநுர மனது ங்க (தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்)

10.கீர்த்தி கமகே (காணி ஆணையா ளர் நாயகம்)

11. ஆரியரத்ன திசாநாயக்க தென்ன கோன் (நில அளவையாளர் நாயகம்)

12. பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவ (சிரேஷ்ட விரிவுரையாளர் - களனி பல்கலைக்கழகம்)

13. தேசபந்து தென்னக்கோன் - சிரே ஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்

14. எச்.டி. அசிங்சலா செனவிரத்ன (காணி ஆணையாளர் - கிழக்கு மாகாணம்)

15. திலித் ஜயவீர — (தலைவர், தெரண ஊடக வலையமைப்பு)

16. ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் என்.ஆர். லமாஹேவகே

17. பத்திநாதன் (ஓய்வுபெற்ற மாகாண பிரதம செயலாளர்)18. முபிசால் அபூபக்கர் (விரிவுரையாளர்)

கிழக்கு மாகாணத்தினுள் அமைந்து ள்ள தொல்பொருள் ரீதியிலான பெறு மதி வாய்ந்த இடங்களை அடையாளம் காணுதல், அவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடங்களிலுள்ள தொல் பொருள்களைப் பாதுகாத்தல், அவற் றினை மீள் நிர்மாணித்தல், அந்த தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்காக பொருத்த மான நடைமுறையொன்றை இனங் காணுதல் மற்றும் செயற்படுத்துதல் இந்த செயலணியின் கடமைகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

அவ்வாறான தொல்பொருள் இடங்களு க்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் அளவை அடையாளம் காணுதல் மற்றும் சட்ட ரீதியாக அவ்விடங்களை ஒதுக்குவதற்குத் தேவையான நடவடி க்கைகளை எடுத்தலும் செயலணியின் கடமையாக குறித்தொதுக்கப்பட்டது.

மேலும் தொல்பொருட்கள் உள்ள இடங்களின் கலாசாரப் பெறுமதிகளைப் பாதுகாத்து, இலங்கையின் தனித்து வத்தை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பிரசாரம் செய்தலும், அவ் வாறான மரபுரிமைகளை மேம்படுத்து வதற்கான சிபாரிசுகளைச் செய்தலும் மேற்படி ஜனாதிபதி செயலணிக்கான பணிகளாக கூறப்பட்டிருந்தது.

# சுதந்திர தினத்திற்கு முன் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளமை தமிழர்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் செயல் என்கிறார் ஹரினிஅமரசூரிய!

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை சர்வதேசத்தையும், தமிழ் சமூகத்தையும் ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும். இவரது ஏமாற்று செயற்பாட்டில் பங்காளிகளாக கூடாது என்பதற்காகவே கட்சி தலைவர் கூட்டத்தை புறக்கணித்தோம்.

அனைத்து பிரஜைகளும் சமமாக மதிக்கப்படும் சூழல் அரசியலமைப்பினால் உறுதிப்படுத்த வேண்டும். அதுவே உண்மையான இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை (13ஆம் திகதி) இடம் பெற்ற கட்சி தலைவர்களுடனான சந்திப்பை மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் புறக்கணித்தமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,



பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். இருப்பினும் நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய செயற்படவில்லை.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற உண்மை நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு காணப்படுமாயின் அவர் நல்லாட்சி அரசாங்கத்தில் அதனை செய்திருப்பார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் அல்ல, அவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதி.

அவர்களின் நோக்கத்திற்கு அமையவே அவர் செயல்படுவார். இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க தயார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தர்ம சங்கடத்திற்கு உள்ளான நிலையில் சபையில் வைத்து இணக்கம் தெரிவித்தாரே தவிர அவர் ஒரு போதும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இடமளிக்க மாட்டார். தனது தரப்பினர் ஊடாக அதிகார பகிர்வு விடயத்தை அவர் தடையாக இருப்பார்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் அதிகார பகிர்வுக்கு தான் தயார் என ஜனாதிபதி சர்வதேசத்தையும், தமிழ் சமூகத்தையும் ஏமாற்றும் வகையில் செயற்படுகிறார்.

இவரது ஏமாற்று செயற்பாடுகளுக்கு பங்குதாரராக நாங்கள் தயார் இல்லை. தீர்வு வழங்குவது சாத்தியமற்றதாயின் அது இன நல்லிணக்கத்திற்கு மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அனைத்து பிரஜைகளும் சமமாக மதிக்கப்படும் சூ ழல் அரசியலமைப்பினால் உறுதிப்படுத்த வேண்டும். அதுவே உண்மையான இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும்.

நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை இரண்டாம் சமூகம் என அடையாளப்படுத்துவதை அரசியலமைப்பினால் தவிர்க்க வேண்டும்.

புதிய அரசியலமைப்பில் அனைத்து இன மக்களும் இலங்கையர்கள், இன அடிப்படையில் எவருக்கும் விசேட வரப்பிரசாதங்கள் வழங்கப்பட கூடாது. ஒரு இனத்திற்கு மாத்திரம் அரசியலமைப்பினால் விசேட சலுகை வழங்கபடும் போது எவ்வாறு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றார்.

# இறுதிப் போரின் போது சரணடைந்த எழிலனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு இராணுவத்தினருக்கு நீதிபதி உத்தரவு!

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்டபோரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பில் அடுத்த தவணையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் அல்லது அவரை முன்னிலைப்படுத்த முடியாமைக்கான காரணங்களை விளக்க வேண்டும் என சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றால் 16டிசம்பர் 2022 இடம்பெற்ற நிலையில் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

போர் முடிந்த இறுதி கட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அதாவது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய வழக்குகள் பல விசாரணைக்கு வந்திருந்தன.

அவற்றில் முதல் ஐந்து வழக்குகளின் தீர்ப்பு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நீதிமன்றத்தில் விடப்பட்டன. இந்த வழக்கின் பூ ர்வாங்க விசாரணை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று அதன் பின்னர் நீதவானின் அறிக்கையின் பிரகாரம் மேல்நீதிமன்றத்திற்கு வந்தது.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்ற விளக்கத்தில் எல்லா மனுதாரர்களும் தமது சாட்சியத்தையளித்து பின்




னர் இராணுவம் சார்பாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டது.

அந்த இராணுவ அதிகாரி சாட்சியம் அளிக்கும் போது சரணடைந்தவர்களின் பட்டியல் தங்களிடம் இருப்பதாக கூறியிருந்தார். எனினும் அந்த பட்டியலை நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. பின்னர் இந்த வழக்கு மேல்நீதிமன்றில் பரிசீலிக்கப்பட்டுநேற்று முதலாவது வழக்கு தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மனுதாரர் அவர்கள் தன்னுடைய கணவர் தனது கண் முன்னாலே தாங்களே சரணடைய வைத்து முகாமில் செய்த அறிவித்தலின் பிரகாரம் அதாவது சரணடைந்தவர்கள் பாதுகாப்பாக வைக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் தன்னுடைய கணவரை சரணடைய செய்து அதன் பின் தன்னுடைய கணவர் பல இ.போ.ச பஸ்கள் மூலம் அவரும் அந்த பஸ்ஸில் அடைக்கப்பட்டு இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டார் என்ற வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

எனவே இறுதியாக அந்த மனுதாரரின் கணவர் அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர் இராணுவத்தின் மத்தியில் தான் இருந்தார் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தார் என்பதை மன்று ஏற்றுக் கொண்டது. அதே சமயத்தில் அதனை எதிர்த்த இராணுவ தரப்பினர் அது தொடர்பான திருப்திகரமான பதிலையும் முன்வைக்கவில்லை என்ற ஒரு நிலைப்ப ாட்டை நீதிமன்றம் எடுத்தது.

அதாவது அதை எண்பிக்கும் பொறுப்பு காணாமல் ஆக்கப்பட்ட நபர் இராணுவத்திடம் சரணடையவில்லை என்ற அதனை நிரூபிக்கும் பொறுப்பு இராணுவத்திடம் இருந்தது. ஆனால் பொறுப்பை அவர்கள் சரிவர தங்களுடைய சாட்சியங்கள் மூலம் எண்விக்கவில்லை என்று நீதிமன்றம் கருதியது.

எனவே மனுதாரரின் வேண்டுகோளின் பிரகாரம் ஆட்கொணர்வு மனுவினுடைய எழுத்தாணையை நீதிமன்றம் அனுமதித்து அடுத்த தவணையான 22.03.2023 அன்று காணாமல் ஆக்கப்பட்டவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் அல்லது அவரை முன்னிலைப்படுத்த முடியாமைக்கான காரணங்களை விளக்க வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது. அதே சமயத்தில் இன்னுமொரு வழக்கில் மனுதாரர் போதுமான ஆவணங்களை நீதிமன்றின் முன்னால் சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்த மூன்று வழக்குகளும் வருகின்ற வருடம் ஜனவரி 27ஆம் திகதி நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்டு அதன் தீர்ப்பு வழங்கப்படும் என தெரிவித்தார்.

# இராணுவச் சீருடைத் திருடனை மடக்கிய கிராம மக்கள்!

கிளிநொச்சி- பூநகரி இரணைமாதா நகரில் இராணுவ சீரூடையணிந்து தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கிராம மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இரணைமாதாநகர் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு அதிகாலை வேளை உள்நுழைந்த குறித்த நபர் வீட்டிலிருந்து சங்கிலி மற்றும் காப்பு போன்றவற்றை திருடிக் கொண்டு வெளியேறிய போது வீட்டு உரிமையாளரால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார்.

இதன் போது திருடன் தான் கொண்டு வந்த கத்தியால் வீட்டு உரிமையாளரின் முகத்தில் வெட்டிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட போது ஏற்பட்ட கூக்குரல் காரணமாக அயலவர்களும் ஒன்று சேர்ந்து திருடனை மடக்கி பிடித்துள்ளனர்.

பிடிபட்ட திருடன் இராணுவ சீருடைக்கு ஒத்த உடை அணிந்திருந்ததோடு, முகமூடியும் அணிந்திருந்துள்ளார். அத்தோடு அவரிடம் கூரிய கத்தி ஒன்றும் காணப்பட்டுள்ளது.

மேலும் திருடப்பட்ட சங்கிலி மற்றும் காப்பு என்பவற்றை மீட்டெடுத்ததோடு, அவரிடம் இருந்து கத்தியினை பறித்த



ஊர் மக்கள் குறித்த நபரை முழங்காவில் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இதன் போது வெட்டுக் காயங்களுக்குள்ளான வீட்டு உரிமையாளர் முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளார். இச்சம்பவத்தின் போது சிறுமி ஒருவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

# நீண்ட போதைக்கு அடிமையானோரை மீட்க யாழ்.நகரில் ஒரு இல்லம்!

## இது நம்ம யாழ்ப்பாணம் 11

யாழ்.நகரில் இருந்து
ஈழநாட்டிற்காக
- பகிரதன் -

வடமாகாணத்தில் றிப்பாக யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற போதிலும், அவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கான வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளது. அதேபோல, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உளவளத் துணையை வழங்குபவர்களும் ஒரு சிலராகத் தான் இருக்கின்றார்கள். இதற்கான பயிற்சியும், ஆர்வம் உள்ளவர்களின் சேவையும் யாழ்ப்பாணத்தில் இன்று அவசரமாகத் தேவையாகவுள்ளது.

இந்தப் பணியில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் அருட்தந்தை கலாநிதி டேவிட் வின்சன்ட் பற்றிக். மாற்றம் அறக்கட்டளை என்ற ஒரு அமைப்பை உருவாக்கி போதைவஸ்த்துக்கு எதிரான ஒரு போராட்டத்தை அவர் கடந்த சில வருடங்களாகவே முன்னெடுத்து வருகின்றார். கடுமையான அச்சுறுத்தல்கள், பலத்த சவால்களின் மத்தியில் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கான இல்லம் ஒன்றை யாழ். நகரில் அவர் நடத்தி வருகின்றார்.

போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டவர்களுடைய புனர்வாழ்வு முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் இதற்கான வசதிகள் போதியளவுக்கு இல்லை என்ற நிலையில் மாற்றம் அறக்கட்டளையின் சேவை முக்கியமானதாகவுள்ளது. யாழ். நகரில் நாவலர் வீதியில், ஸ்ரான்லி கல்லுரிக்கு அருகில் அமைந்துள்ள



மாற்றம் அறக்கட்டளையின் அலுவலகத்துக்கு தகவல் பெறுவதற்காக சில தினங்களுக்கு முன்னர் சென்றிருந்தோம். அருட்தந்தை எமது கேள்விகளுக்கு அமைதியாகப் பதிலளித்தார். ஈழநாடு வாசகர்களுக்காக அதனைத் தருகின்றோம்.

கேள்வி - மாற்றம் அறக்கட்டளையை நீங்கள் அமைத்ததன் நோக்கம் என்ன?

பதில்- பாதிக்கப்பட்டு வரும் இளைஞர்கள், மாணவர்களுக்கு போதையிலிருந்து விடுபடுவதற்கான புனர்வாழ்வை வழங்குவது தான் எமது பிரதான நோக்கம். அவர்களுக்கு சிகிச்சையளித்து அவர்களை சாதாரண நிலைக்குக் கொண்டு வருவது. இயல்பு நிலைக்கு அவர்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்களை வழங்குவது. இயல்பான வாழ்வு நிலை இல்லாமல், பிரள்வு நிலையில் அவர்கள் இருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

இந்த நிலையை நீடிக்க விடக் கூடாது என்றால், இந்தத் துறை சார்பாக நாங்கள் எல்லோரும் அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டும். குறிப்பாக சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், பெற்றோர்கள் முன் வந்து இந்த பாரிய பணியிலே பங்கெடுப்பது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

கேள்வி - உங்களுடைய நிறுவனத்தை எப்போது ஆரம்பித்தீர்கள், இங்கு எவ்வளவு பேர் சிகிச்சை பெற்று குணமடைந்திருக்கின்றார்கள்?

பதில்- 2017ஆம் ஆண்டு இந்த அமைப்பை நாம் ஆரம்பித்தோம். அப்போது முல்லைத்தீவு, மன்னார் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என இந்த நான்கு மாவட்டங்களிலும் இருந்த மது போதைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்கான செயற்திட்டங்களைத்தான் முன்னெடுத்திருந்தோம். போதை வஸ்த்து பாவனையாளர்கள் அப்போது ஓரிருவர் தான் இருந்தார்கள். ஆனால், இன்று இளைடிர்களும் மாணவர்களும் பெருமளவுக்கு போதைவஸ்த்து பாவனையாளார்களாக மாறி விட்டனர்.

பாடசாலை மாணவர்கள் கூட போதைப் பொருள் பாவனையாளர்களாக மாற்றமடைந்திருப்பதால் கல்வியில் ஆர்வமற்றவர்களாக மாறி விட்டனர். பாடசாலை இடைவிலகலும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகத் தான் மாற்றம் அறக்கட்டளை செயற்படுகின்றது.

இதேவேளையில் எமது நிலையத்தில் பல நூற்றுக் கணக்கானவர்கள் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் தமது குடும்பங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள்.

கேள்வி- புனர்வாழ்வு செயற்பாடுகளை எந்தவகையில் நீங்கள் முன்னெடுக்கின்றீர்கள்?

பதில் - அவர்கள் இங்கு வந்தவுடன் ஒரு வார காலத்துக்கு அவர்களை நாம் பாதுகாப்பு அறைகளில் வைத்து பராமரிக்கின்றோம். போதை வஸ்த்தை பயன்படுத்த வேண்டும் என்ற ஆசை மிகுதியால் அவர்கள் தப்பிச் சென்று விடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமிருப்பதால் தான் இவ்வாறு அவர்களை பாதுகாப்பாக வைக்க வேண்டியிருக்கின்றது.

அதன்பின்னர் அவர்களுக்கு உடற்பயிற்சிகள், குழுத் தியானம், ஆற்றுப்படுத்தல், குழு ஆற்றுப்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றோம். அவர்களே விரும்பி அவற்றை முன்னெடுக்கும் வகையில் அவற்றை முன்னெடுக்கின்றோம். பெரும்பாலானவர்கள் ஆரம்பத்தில் இவற்றை விரும்பா விட்டாலும் காலப் போக்கில் அவற்றை விரும்பி ஏற்றுக் கொள்கின்றார்கள். மாற்றத்தை ஏற்படுத்துவது தான் எமது நோக்கம். இந்த மாற்றத்தை அவர்கள் உணர்வதற்கு நாங்கள் உதவி செய்கின்றோம்.




கேள்வி - உங்களிடம் புனர்வாழ்வுக்காக வருபவர்கள் தாமாகவே வருகின்றார்களா? அல்லது குடும்பத்தவர்கள் கொண்டு வந்து சேர்த்து விடுகின்றார்களா?

பதில்- இரண்டு விதமதகவும் நடக்கின்றது. தாமாகவே விரும்பி, பெற்றோருக்குச் சொல்லி சிகிச்சைக்காக வருபவர்களும் இருக்கின்றார்கள். எமது பிள்ளையை எப்படியாவது மாற்றித் தாருங்கள் என்ற கெஞ்சுதலுடன் தமது பிள்ளைகளை அழைத்துவரும் பெற்றோரும் இருக்கின்றார்கள். இதனை விட நீதிமன்றம், பொலிஸ் போன்றவற்றால் நேரடியாக அனுப்பப்பட்ட பிள்ளைகளும் இருக்கின்றார்கள்.

கேள்வி- புனர்வாழ்க்கு வருபவர்கள், உங்களுடைய புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு எந்தளவுக்கு ஒத்துழைக்கின்றார்கள்?

பதில்- அனேகமாக இங்கு வரும் அனைத்து இளைஞர்களுமே இதனை விரும்புகின்றார்கள். மாற்றத்தை அவர்கள் விரும்புகின்றார்கள். தாம் சமூகத்துடன், குடும்பத்துடன் மீள இணைந்து கொள்ள வேண்டும் என்பது அவர்களது விருப்பமாக இருக்கின்றது. இவ்வாறான தமது விருப்பத்தை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள். இங்கு வந்த பின்னர் தான் எமக்கு வாழ்க்கையின் அர்த்தம் தெரிகின்றது என்று அவர்கள் சொல்கின்றார்கள். இங்கு வந்த பின்னர் தான் வழிபாட்டில், தியானத்தில் தம்மால் பங்கேற்க முடிகின்றது என்பவற்றை அவர்கள் சொல்கின்றார்கள்.

போதையால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள் என்ன மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், கோவில்களுக்குச் செல்ல மாட்டார்கள். ஆன்மீகத்தில் அவர்களுக்கு நாட்டம் இருக்காது. இதுவும் அவர்கள் போதைப்பொருட்களை நாடிச் செல்வதற்குக் காரணமாக இருக்கின்றது. இந்த இடத்தில் பெற்றோருடைய பொறுப்பும் அதிகமாக இருக்கின்றது. பெற்றோர் பொறுப்பில்லாமல், பிள்ளைகள் எங்கு சென்று வருகின்றார்கள் என்பனவற்றைத் தெரியாமல் இருப்பதும் இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணமாக உள்ளது.

பெற்றோர் பிள்ளைகளிடம் அதிகாரபூர்வமாக அணுகுமுறையை மேற்கொள்வது தவறானது. இந்தக் காலத்தில் பிள்ளைகள் அதனை வரவேற்க மாட்டார்கள். கட்டாயப்படுத்தி எதனையும் செய்ய முடியாது. அதேவேளையில் ஏனோ தானோ என்ற நிலையிலும் பிள்ளைகளை விட்டுவிட முடியாது. மூன்றாது அணுகுமுறை அன்பு மயப்படுத்தப்பட்ட அணுகுமுறை. அது தான் பிள்ளைகளை சரியான முறையில் வழிப்படுத்துவதற்குப் பொருத்தமானது. இதுதான் ஆரோக்கியமான அணுகுமுறை. இதனைத் தான் பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டும்.

புனர்வாழ்வுச் செயற்பாடுகளின் போது எதிர் கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள், சவால்கள், எதிர்கால செயற்திட்டங்கள் என்பன குறித்தும் அருட்தந்தை அருட்தந்தை கலாநிதி டேவிட் வின்சன்ட் முக்கியமான தகவல்களை அடுத்த வாரமும் ஈழநாடு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

## ஒரு தமிழருக்கும் இடமில்லாத உச்சக் கட்ட....

(7ம் பக்கத் தொடர்ச்சி) இடமிருந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் கூறினார். தமிழ் முற்போக்கு கூட்டணி எம்பி ஒருவரை தமது பிரதிநிதியாக நியமிக்க முதலில் எம்மிடம் உடன்பட, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, பிறகு தமது கட்சியில் இருந்து, எம்பி கபீர் ஹீசிமை நியமிக்க வேண்டிய கட்டாயம் தனக்கு உள்ளதாக கூறினார். எம்பி கபீர் ஹீசிம் சகோதர முஸ்லிம் எம்பி என்பதால் அதை நாம் புரிந்துக் கொண்டோம்.

இந் நிலையில், மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களில் ஒருவர், கட்டாயம் மலையக இந்திய வம்சாவளி தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அதற்கான பெயரையும் நாம், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக, பிரதமர், எதிர்கட்சி தலைவர் ஆகியோரிடம் சிபாரிசு செய்து வழங்கியுள்ளோம்.

இத்தகைய பின்னணியில், இறுதியான ஒரேயொரு எம்பி நியமனத்தில், எம்பி சித்தார்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு சிபாரிசு செய்துள்ளது. அது சட்டப்படியும், அரசியல் நியாயப்படியும் சரியானது. ஆகவே அதை நாமும் ஆதரிக்கிறோம். இதையே இன்று பிரச்சினைக்கு உள்ளாக்கி, அதையும் தட்டிப் பறித்து, ஈழத்தமிழ், மலையக தமிழ் என்ற பேதமில்லாமல் ஒரு தமிழ் எம்பிகூட அரசியலமைப்பு பேரவையில் இடம்பெற முடியாத நிலைமையை இனவாதிகள் ஏற்படுத்த முயல்கிறார்கள் என்று மனோ கணேசன் குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 டிசம்பர் 2022 முதல் 23 டிசம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 88வது பிறந்த நன்நாள் நினைவாக



### திருமதி பரமேஸ்வரி சிவனடியான்

அனலைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது 88வது பிறந்த நன்நாள் 21 டிசம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிரேசு முத்துத்தம்பி

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த அமரர் உயர்திரு கதிரேசு முத்துத்தம்பி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு.கதிரேசு முத்துத்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு: நினைவு நாள் 27 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 28வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சடாச்சரசுந்தம் கந்தசாமி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 28வது ஆண்டு நினைவு தினம் 29 டிசம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நீங்கா நினைவுகளுடன்



### திரு பிரபா நல்லதம்பி (பாபு)

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பாபு என்று அன்பாக அழைக்கப்படும் **RE/MAX** வீடு விற்பனை முகவர் திரு பிரபா நல்லதம்பி அவர்களது முதலாம் மாத நினைவு நாளுக்காக 28 டிசம்பர் 2022 திங்கட்கிழமை இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலைய நண்பர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பிரபா நல்லதம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் நண்பர்களுடன் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 17 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்


### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 25 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




17 டிசம்பர் 2022 சனிக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 டிசம்பர் 2022 சனிக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 டிசம்பர் 2022 சனிக்கிழமை புலோலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சபாபதிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களது 125து ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





19 டிசம்பர் 2022 திங்கட்கிழமை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு வல்லிபுரம் சதானந்தசிவம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 டிசம்பர் 2022 திங்கட்கிழமை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு வல்லிபுரம் சதானந்தசிவம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





19 டிசம்பர் 2022 திங்கட்கிழமை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு வல்லிபுரம் சதானந்தசிவம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 டிசம்பர் 2022 திங்கட்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமை தாவடி வடக்கு கொக்குவிலைச் சேர்ந்தவர்களான திரு செல்லையா இராஜதுரை (ஆசிரியர்) திருமதி நாகரெத்தினம் இராஜதுரை இணையரது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி யேசுதாசன் அந்தோனிப்பிள்ளை ஜெஸ்மின் இணையரது 36வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




21 டிசம்பர் 2022 புதன்கிழமை அனலைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரத்துவமாது திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது 88வது பிறந்த நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 டிசம்பர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் வாசுகி மாணிக்கவாசகர் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




22 டிசம்பர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி லக்ஷன் நீதா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஏரியானா லக்ஷன் செல்வன் ஆர்விக் லக்ஷன் ஆகியோர் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




23 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.







# 2 தமிழ் சமூக சேவையாளர்களுக்கு பிரிட்டன் மகாராணியின் சேவை ஞாபகார்த்த பதக்கம் வழங்கி கௌரவிப்பு









பிரிட்டிஸ் மகாராணியின் சேவை ஞாபகார்த்த பதக்கம் வழங்கி தமிழன் வழி காட்டி செந்தி, மற்றும் சமூகத் தொண்டன் சோம சச்சிதானந்தன் ஆகிய இரு தமிழ் சமூகச் செயற்பாட்டாளர்களும் ஒன்ராரியோ பாராளுமன்ற முன்னாள் சபா நாயகரும், 20 ஆண்டு காலமாக ஒன்ராரியோ பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த அல்வின் கேர்லின் ஆகியோர் ஸ்காபுரோ நோத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் **Hon. Shaun Chen M.P** அவர்களால் கடந்த 17-12-2-22 ஸ்காபுரோவில் கௌரவிக்கப்பட்டனர். அங்கே எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.







# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# ஆசிரியை செல்வி கமலாதேவி நமசிவாயம் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையுமான செல்வி கமலாதேவி நமசிவாயம் அவர்கள் கடந்த மாதம் 17-11-2022 வியாழக்கிழமை யாழ்நகரில் இயற்கை எய்தினார். அவரது ஈமைக்கிரிகைகள் மறுநாள் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

காலஞ்சென்ற பண்டிதமணி இ. மருதையனார் அவர்களது தங்கையின் மூத்த மகள் காலஞ்சென்ற திருமதி புனிதவதி நமசிவாயம் அவர்களது இரண்டாவது மகளே கமலாதேவி அவர்கள். அன்னாரது தந்தை காலஞ்சென்ற திரு சுப்பிரமணியம் நமசிவாயம் (நமசிவாய வாத்தியார்) அவர்களது பிறப்பிடம் வேலணை மேற்கூரிலுள்ள வேனாக்குளத்திற்கு அண்மித்த பகுதி. காலஞ்சென்ற பேராசிரியர் செ. பாலச்சந்திரன் அவர்களது தாயார் திருமதி பொன்னம்மா செல்லத்துரை அவர்களும் நமசிவாய வாத்தியாரும் ஒன்று விட்ட சகோதரர்களாவர். திருமணத்தின் பின்னர் அவர் வாழ்ந்த இடம் தலைகாட்டி (கைத்தனை வீதி). அங்கு தான் செல்வி கமலாதேவி அவர்கள் பிறந்து வளர்ந்தார்.

சிறுவயது முதல் கல்வியில் அதீத ஆர்வம் கொண்டிருந்தார். தனது வீட்டிற்கு அருகாமையில் வசித்த உறவினரான திரு வை. சிவநாதன் (செட்டியாரின் மகன்) அவர்களிடமும் தனது சிரேஸ்ட மாணவர்களிடமும் பாடங்களில் ஏற்பட்ட சந்தேகங்களைக் கேட்டறிந்து மிகச்சிறந்த மாணவியாகத் திகழ்ந்தார்.

நமசிவாய வாத்தியார் அவர்கள் ஐம்பது அறுபதுகளில் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்வேலியைச் சேர்ந்தவரும் எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரி



யருமான திரு பஞ்சாட்சரம் அவர்கள் தனக்கு வேலணையில் பிடித்தவர்கள் இருவர் என்றும் ஒருவர் வேலணை கிழக்கைச் சேர்ந்தவரும் முன்னாள் வேலணைக் கிராமசபைத் தலைவருமான காலஞ்சென்ற திரு செல்லையா வாத்தியார் என்றும் மற்றையவர் திரு நமசிவாயம் வாத்தியார் என்றும் கூறக் கேள்விப்பட்டுள்ளேன்.

உள்ளூர் மட்டுமல்ல பிற ஊர் ஆசிரியர்களாலும் நேசிக்கப்பட்ட பெருந்தகை. அன்னாரது இளைய சகோதரியும் விஞ்ஞானப் பட்டதாரியுமான செல்வி கலா நமசிவாயம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இரசாயனவியல் பிரத்தியேக ஆசிரியை என்பதனையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

கமலாதேவி அவர்களுடன் வேலணை மத்திய கல்லூரியில் படித்தவரும் தற்போது வவுனியாவில் வசித்து வருபவருமான ஓய்வுநிலைக் கணக்காளர் திரு மனோ செல்லையா அவர்களுடன் அலைபேசியில் பேசிய போது தன்னுடன் ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை படிக்கும் போது அன்னாரே முதல்நிலை மாணவியாக இருந்ததாகப் பெருமையுடன் கூறினார்.

தமக்கு சில வருடங்கள் சிரேஸ்ட மாணவியாக பயின்றவர் என்றும் தனது நெருங்கிய உறவினரான ( மருமகள்) திருமதி சிவசோதி யோகராசா அவர்களது சக மாணவியாகவும் நெருங்கிய தோழியாகவும் இருந்தவர் என்றும் அதனால் அவரைப் போலவே இவரும் தன்னை வாசன் என்றே அழைத்ததாகவும் தானும் அக்கா என்றே அழைத்த அந்த சிறு வயது நினைவுகள் நிழலாடுகின்றன என்று ஓய்வுநிலைப் பொறியியலாளர் திரு பொன்னையா மாணிக்கவாசகர் அவர்கள் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

வேலணை மத்திய கல்லூரி வாழ்க்கையில் அன்புக்குரிய நண்பியாகவும், தோழியாகவும் சகோதரியாகவும் இருந்ததுடன் தனது குடுமபத்தின் சுமைதாங்கியாகவும் அதே நேரத்தில் கடமையே கண்ணாக நினைத்து விஞ்ஞான பாடத்தை வில்லங்கமாக நினைத்த மாணவர்களுக்குத் தனது கற்றல்-கற்பித்தல் ஆளுமையினால் தித்திக்கும் தேனாக மாற்றி அம் மாணவர்களின் வாழ்க்கையில் ஞானச்சுடரை ஏற்றி வைத்தவர் அமரர் கமலா என்று அவரது காலத்தில் ஆசிரியை யாகக் கடமையாற்றிய சக விஞ்ஞான ஆசிரியை திருமதி திலகம் பாலகுமாரன் (மிஸ் தர்மலிங்கம்) அவர்கள் கூறியுள்ளார்.

திறமைமிக்க விஞ்ஞானபாட ஆசிரியையாகத் தனது சேவைக் காலத்தின் இறுதிப் பகுதியில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெற்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த நிலையில் திடீரென ஏற்பட்ட சுகயீனங் காரணமாக அவரது உயிர் பிரிந்தது கவலைக்குரியதே. இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டியவர். ஆனால் விதியை யாரால் வெல்ல முடியும்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினுந் தான் முந்துறும்.

இவரது இழப்பால் துயருற்றிருக்கும் சகோதரிகளுக்கும் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு ஆசிரியை அவர்களது ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமசுந்தரி சமேத நடராசப் பெருமானை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சி.இளஞ்செழியன்
பழைய மாணவர் (1975-1982)
வேலணை மத்திய கல்லூரி


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறிவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# எல்லாரும் ஏறிச் சறுக்கிய குதிரையில் சக்கடத்தார்!

இராமநாதன் சகோதரர்களில் இருந்து தொடங்கி சம்பந்தர்கள் வரையிலும் சிங்களத் தலைவர்களிடம் ஏமாந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு கால அரசியல் அனுபவம் அது. கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இலங்கைத்தீவு சுதந்திரம் அடைய முன்னும் பின்னும் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களோடு நடத்திய பேச்சுவார்த்தைகள், சந்திப்புகள்,எழுதிய உடன்படிக்கைகள் எதுவுமே வெற்றி பெறவில்லை.

ஆயுதப் போராட்டம் கொழும்பின் மீது நிர்ணயகரமான அழுத்தத்தை பிரயோகித்தது. அதனால் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் நிலைத்திருந்த இரண்டு உடன்படிக்கைகள் எழுதப்பட்டன. மூன்றாவது தரப்பொன்று தலையிட வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் தமிழ் மக்கள் சிந்திய ரத்தத்தின் விளைவாக எழுதப்பட்ட இரண்டு உடன்படிக்கைகள் ஒப்பிட்டுளவில் நீண்ட காலம் நிலைத்திருந்தன. முதலாவது இந்திய இலங்கை உடன்படிக்கை. அடுத்தது ரணில் பிரபாகரன் உடன்படிக்கை. இது தவிர ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரும் எழுதப்பட்ட உடன்படிக்கைகள் எவையும் நீடித்திருக்கவில்லை. அவை சிங்களத் தரப்புகளாலேயே கிழித்து எறியப்பட்டன.

ஆயுதப் போராட்டமானது இலங்கைத் தீவின் அரசியல் இராணுவ வலுச்சம நிலையை மாற்றக்கூடிய பலத்தோடு காணப்பட்டது. அவ்வாறு வலுச்சம நிலை மாறும் போதெல்லாம் சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. அல்லது பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. ஆனால் 2009 க்கு பின் அவ்வாறு இலங்கைதீவின் அரசியல் வலுச் சமநிலையை மாற்றத்தக்க பேரபலம் தமிழ்த் தரப்பிடம் இல்லை.

முதலாவதாக தமிழ்த்தரப்பு ஒரு திரண்ட சக்தியாக இல்லை. இரண்டாவதாக, தமிழ்த் தரப்பு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தொடர்ச்சியான நிர்ணயகரமான போராட்டங்கள் எதையும் முன்னெடுக்கவில்லை. தமிழ்த்தரப்பில் இப்பொழுது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மொத்தம் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. தலைக் கணக்கின்படி பார்த்தால் அது மிகச் சிறிய தொகை. தமிழ் மக்களின் அரசியல் இப்பொழுது தேர்தல் மைய அரசியலாகத் தான் காணப்படுகிறது. மக்கள் இயக்கம் கிடையாது. இந் நிலையில் பூகோள அரசியலைக் கையாளப் போகின்றோம் புவிசார் அரசியலை கையாள போகின்றோம், என்று தமிழ்க் கட்சிகள் கூறிக் கொள்ளலாம்.

ஆனால் நடைமுறையில் அவ்வாறு புவிசார் அரசியலையோ அல்லது பூகோள அரசியலையோ கையாளத் தேவையான கட்டமைப்புகள் எவையும் தமிழ்க் கட்சிகளிடம் இல்லை. அதாவது தொகுத்துக் கூறின் 2009 க்கு பின் தமிழ் அரசியல் எனப்படுவது ரியாக்ட்டிவாகத தான்-பதில் வினையாற்றும் அரசியலாகத் தான் இருக்கிறதே தவிர புரோஆக்டிவாக-தனது செயல்களுக்கு ஏனைய தரப்புக்களை பதில் வினையாற்ற நிர்பந்திக்கும் அரசியலாக இல்லை.

இப்பொழுதும் கூட பொருளாதார நெருக்கடி காரணமாகத் தான் ரணில் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார். அதுகூட வெளி நிர்ப்பந்தமே காரணம். பொருளாதார நெருக்கடிக்கான நிதி உதவிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் ஒரே பக்கேஜ்ஜுக்குள் வைக்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துவதாகத் தெரிகிறது. கடைசியாக நடந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவும் அதை



வலியுறுத்தியது. எனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பது போல ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ரணிலுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு வெளித்த ரப்புகளிடமிருந்து வரும் நிர்பந்தங்கள் காரணமாக அவர் பேச வந்திருக்கிறார். இந்த நிர்பந்தங்கள் காரணமாக தமிழ்த் தரப்பின் பேரம் ஒப்பீட்டளவில் அதிகரித்து இருக்கிறது தான். ஆனாலும் தனது கோரிக்கைகளை முன் நிபந்தனைகளாக வைத்து பேச்சுவார்த்தைகளை தொடங்குமளவுக்கு தமிழ்த்தரப்பு பலமாக இருக்கிறதா என்ற கேள்விக்கு விடை இங்கு முக்கியம்.

ஆயுதப் போராட்டத்தின் பேரபலம் காரணமாகத்தான் வெளித்தலையீடுகள் ஏற்பட்டன. மூன்றாவது தரப்புகளின் மேற்பார்வையின் கீழ் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. .இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதலாவது வெளிநாட்டு பேச்சுவார்த்தை திம்புவில் இடம் பெற்றது. அங்கிருந்து தொடங்கி ஒஸ்லோ வரையிலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. வெளிநாடுகளில் நிகழ்ந்த எல்லா பேச்சுவார்த்தைகளுக்கும் காரணம் ஆயுத போராட்டந்தான்.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் பின்னருமான மிதவாத அரசியலில் வெளியரங்கில் இடம 'பெற்ற பேச்சுவார்த்தைகள் என்று பார்த்தால் 2015 ஆட்சி மாற்றத்திற்காக நிகழ்ந்த சில இரகசிய சந்திப்புகளைத் தான் குறிப்பிடலாம். மற்றும்படி ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபின் பேச்சு வார்த்தைகளை கொழும்புக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தரை கிட்டத்தட்ட 17 தடவைகள் ஏமாற்றினார் என்று சம்பந்தரே கூறுகிறார். அதன் பின் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய யாப்புருவாக்கக் குழு 82 தடவைகள் சந்தித்தது. எல்லாவற்றையும் முடிவில் மைத்திரி குழப்பினார். நிலைமாறுகால நீதியின் கீழ் ஒரு புதிய யாப்பை உருவாக்க முயன்ற ரணிலின் முயற்சிகளை மைத்திரி முறியடித்தார். அம்முயற்சிகளுக்கு ஐநா பின்பலமாக இருந்தது.ஐநாவின் 30-1 தீர்மானம் அதற்குரிய அடிப்படைகளை வகுத்துக் கொடுத்தது. ஆனாலும் ஐநா இலங்கைத்தீவில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய நிலைமை இருக்கவில்லை. ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு அவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்குரிய ஆணையும் இருக்கவில்லை. அதனால் தான்

2018ல் ஒக்டோபர் மாதம் மைத்திரிபால சிறிசேன பொறுப் புக் கூறலுக்கான உடன்படிக்கையை ஒரு தலைப்பட்சமாக முறித்தார். அதன் பின் ஆட்சிக்கு வந்த கோட்டாபய அரசாங்கம் மேற்படி பொறுப்புக் கூறலுக்கான ஐநா தீர்மானத்துக்கு முன்னைய இலங்கை அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணையிலிருந்து விலகியது. அதாவது ஐநா மனித உரிமைகள் பேரவையில் ஒப்புக் கொண்ட கடப்பாடுகளில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்கியது. அனைத்துலக அரங்கில் தானும் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட பொறுப்புகளில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்க முடியும் என்பதற்கு அது ஆகப் பிந்திய உதாரணம் ஆகும்.

ஏற்கனவே இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்ட 13 வது திருத்தத்தை எந்த ஒரு ஜனாதிபதியும் முழுமையாக அமல்படுத்தவில்லை. மாறாக 13வது திருத்தத்தின் உள்ளடக்கத்தை படிப்படியாக உருவி எடுத்து விட்டார்கள். இப்பொழுது அது ஒரு கோறை. தான் பெற்ற பிள்ளையாகிய 13 வது திருத்தத்தின் உறுப்புகள் ஒவ்வொன்றாக வெட்டப்பட்ட பொழுது அதன் பெற்றோரில் ஒருவராகிய இந்தியா அதைப் பார்த்துக் கொண்டிருந்தது. 2009க்கு பின்னரும் கடந்த 13 ஆண்டுகளாக இந்தியா அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

எனவே கொழும்புடனான பேச்சுவார்த்தைகள் என்ற நூற்றாண்டு கால தோல்விகரமான அனுபவத்தின் பின்னணியில், குறிப்பாக 87 ஆம் ஆண்டுக்கு பின்னரான கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலான அனுபவங்களைத் தொகுத்துப் பார்த்தால், தமிழ் மக்களுக்கு மிக கசப்பான பாடங்கள் கிடைக்கின்றன.. பிராந்திய மட்டத்திலும் அனைத்துலக மட்டத்திலும் எழுதப்பட்ட உடன்படிக்கைகளில் இருந்து இலங்கை அரசாங்கங்கள் பின்வாங்கியிருக்கின்றன.


ஒரு பிராந்தியப் பேரரசாகிய இந்தியாவும் இந்த விடயத்தில் அழுத்தத்தை பிரயோகிக்க முடியவில்லை. உலகப் பொது மன்றமாகிய ஐநாவும் அழுத்தத்தை பிரயோகிக்க முடியவில்லை. அவ்வாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களின் மீது நிர்ணயகரமான அழுத்தங்களை பிரயோகிக்கும் ஆணை ஐநா மனித உரிமைகள் பேரவைக்குக் கிடையாது. அப்படியென்றால் ஒரு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் எனப்படுவது வெறும் பிரசன்னமாக மட்டும் இருந்தால் போதாது. அதைவிட ஆழமான பொருளில் அழுத்தத்தை பிரயோகிக்கும் ஒரு பிரசன்னம் தேவைப்படுகிறது என்று பொருள்.

சமூக செயற்பாட்டாளராகிய செல்வின் சொன்னார்...நோர்வையின் அனுசரனையுடனான சமாதான முயற்சிகள் தோல்வியுற்ற பின் ஒஸ்லோவில் நடந்த ஒரு சந்திப்பில் சிறப்புத் தூதுவரான சூல் ஹெய்ம் பின்வரும் தொனிப்பட கருத்து தெரிவித்திருக்கிறார் நோர்வே ஓர் அனுசரணையாளர் மட்டுமே. அனுசரணை என்பது, சந்திக்கும் இடங்களையும் சந்திப்பு நேரங்களையும் ஒழுங்குபடுத்துவது. சந்திப்புக்கான



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

பயண ஏற்பாடுகளையும் தங்குமிட ஏற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துவது என்பவை தான் என்று. அவர் இவ்வாறு கூறிய பின் நிகழ்ந்த மற்றொரு தனிப்பட்ட சந்திப்பில் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியான மார்ட்டி அஹ்ரிசாரி-அவர் தான் பலஸ்தீனத்தில் பேச்சுவார்த்தைகளை ஒழுங்குபடுத்திய



வர் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளை குறித்து பின்வரும் தொனிப்பட கருத்து தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்பும் சமாதானத்துக்கு தயாரில்லை என்றால், அந்த இடத்தில் நான் இருந்திருந்தால், இரண்டு பேரையும் வீட்டுக்கு அனுப்பியிருந்திருப்பேன். பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்திருக்க மாட்டேன் என்று. ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தேவையான வளங்களை ஒழுங்குபடுத்துவது மட்டும் ஒரு மூன்றாந்தரப்பின் வகிபாகம் அல்ல என்ற பொருளில்.

சூல் ஹெய்ம் மற்றும் மார்ட்டி அஹ்ரிசாரி ஆகியோரின் கூற்றுக்களின் அடிப்படையிலும், ஆயுதப்போராட்ட காலத்தில் நடந்த பேச்சுக்களில் தலையிட்ட மூன்றாந் தரப்புக்களான இந்தியா, நோர்வே(அமெரிக்கா) ஆகிய இரு தரப்புக்களுடனும் தமிழ்த் தரப்பு முரண்படும் ஒரு நிலை ஏன் ஏற்பட்டது என்ற அனுபவத்தின் அடிப்படையிலும் ஈழத்தமிழர்கள் தொகுக்கப்பட்ட ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஒரு மூன்றாந் தரப்பின் தலையீடு இன்றி இலங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை. அதே சமயம் ஒரு மூன்றாவது தரப்பின் தலையீடு எனப்படுவது வெறுமனே பிரசன்னமாகவோ அல்லது நடுநிலை வகிக்கும் மத்தியஸ்தராகவோ அல்லது அனுசரணையாளராகவோ இருந்தால் மட்டும் போதாது. நீதியான சமாதானத்தை நோக்கி அழுத்தங்களைப் பிரயோகிக்குமளவுக்கு ஒரு மூன்றாவது தரப்பின் வகிபாகம் இருக்க வேண்டும்.

ஆனால் அப்படிப்பட்ட மூன்றாவது தரப்பை உள்ளே கொண்டு வருமளவுக்கு தமிழ்த் தரப்பு பேரபலத்துடன் இல்லை என்பதால் தான் ரணில் மூன்றாவது தரப்பைக் குறித்து சீரியஸாக இல்லையா? அல்லது அவர் பேச்சுவார்த்தையிலேயே சீரியஸாக இல்லையா?

# பேச்சுவார்த்தைகளில் என்ன நடக்கிறது?

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
– பார்த்தீபன் –

இன நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்த அனைத்துக் கட்சிகளின் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றிருக்கின்றது. பலத்த ஆரவாரங்களுடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் காணாமல்ஆக்கப்பட்டோர் பிரச்சினை, காணிப் பிரச்சினை போன்ற அன்றாடப் பிரச்சினைகளுக்கு ஜனவரி 31க்கு முன்னதாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அடுத்த கட்டமாக தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் அவசர சந்திப்பு ஒன்றை நடத்தியிருக்கின்றார். இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இதில் முக்கியமான சில விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சந்திப்பு அவசரமாகக் கூட்டப்பட்டதால், விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருக்கவில்லை. சம்பந்தனும், சுமந்திரனும் மட்டுமே தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் கலந்து கொண்டிருந்தார்கள்.

சென்ற வாரம் இன நல்லிணக்கம் சம்பந்தமான சர்வகட்சி குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கூட்டமாக இது அமைந்திருந்தது. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் பேசப்பட்டது. இதன்போது 5 பேரினை உடனடியாக விடுவிக்க கூடியதாக உள்ளதாகவும் மற்றவர்கள் தொடர்பில் சட்டமா அதிபர் சில முன்மொழிவுகளை வழங்கவுள்ளதாக சட்டமா அதிபர் கூறியுள்ளார்.

படையினர் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் விடுவிப்பு தொடர்பில் பேசப்பட்டது. இதில் இராணுவம் சில நிலங்களை விடுவிப்பதற்கு பிரேரித்திருப்பதாகவும் இது தேசிய பாதுகாப்பு சபை ஜனவரி 3ஆம் திகதி கூடியவுடன் அதன் முடிவுகள் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மீள ஜனவரி 5 ஆம் திகதி சந்திப்பொன்று இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அரசியல் கைதிகளின்



விடுதலை குறித்து இதில் மீள ஆராயப்படும்.

இதேவேளையில், 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான நான்கு தினங்களிலும் கூடி அரசியலமைப்பு விடயம் தொடர்பில் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் தீர்வு தொடர்பில் பொங்கல் தினத்துக்குள் முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதற்காகவே இந்த மரதன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமஷ்டி அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முன் வைத்திருக்கின்றார். எதிர்வரும் பெப்ரவரி 04க்கு முன்னர் தீர்வு என ஜனாதிபதி ரணில் சொல்லிக் கொண்டிருக்கின்றார். அரசியல் தீர்வைப் பொறுத்தவரையில் மூன்று விதமான கருத்துக்கள் உள்ளன.

முதலாலது, சமஷ்டி முறையிலான தீர்வு என்பதைத் தான் தமிழ்த் தரப்பினர் அதி உச்ச கோரிக்கையாக முன் வைத்திருக்கின்றார்கள். ஆனால், இதற்கு சிங்களத் தரப்புக்களோ அரசாங்கமோ இணங்கப் போவதில்லை என்பது தெரிகின்றது. நாட்டின் இறைமையைப் பாதிக்காத – ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வு என அவர்கள் சொல்வதன் மறுபக்கம் – சமஷ்டிக்கு நாங்கள் இணங்கப் போவதில்லை என்பதைத் தான். ஆக, சமஷ்டி என்ற தீர்வை எதிர் பார்க்கக்கூடிய நிலை இலங்கை அரசியலில் இல்லை. ஆனால், இந்தியாவும், சர்வதேசமும் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தால் மற்றொரு பெயரில் சமஷ்டியை ஒத்த தீர்வு ஒன்றுக்கு சிங்கள தரப்பு வரலாம்.

இரண்டாவதாக, புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்ற ஒரு கருத்தும் முன் வைக்கப்படுகின்றது. புதிய அரசியலமைப்பு என்று சொல்லும் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை தொடருமா என்பது கேள்விக்குறியாகலாம். ஏனெனில் சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்துமே நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதை கடந்த காலங்களில் வலியுறுத்தியிருக்கின்றன. தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் அது சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க முற்படும் போது நிறைவேற்று அதிகாரம் கேள்விக்குறியாக்கப்படும். ரணில் விக்கிரமசிங்கவோ, ராஜபக்ஷக்களோ அதனை விரும்பவில்லை. அதனால், புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் அவர்கள் இறங்கப் போவதில்லை.

மூன்றாவதாக, 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துதல். செவ்வாய்கிழமைப் பேச்சு வார்த்தையின் போதும் இது தொடர்பில் பேசப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவும். இதனை விரும்புகின்றார். மகிந்த ராஜபக்ஷவும், சஜித் பிரேமதாசவும் கூட அண்மையில் பாராளுமன்றத்தில் இதற்கு ஆதரவைத் தெரிவித்திருந்தார்கள். தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில் கூட, பெரும் பாலான கட்சிகள் 13 முழு அளவில் நடைமுறைப்படுத்தினால் போதும் என்ற நிலைப்பாட்டில் உள்ளன. கஜேந்திரகுமாரின் கட்சி மட்டும் இதனை ஏற்க மறுப்பதுடன், இதனை ஏற்றுக் கொள்பவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்துகின்றது.

13 ஐ நடைமுறைப்படுத்துகின்றோம் என்று சொல்லிவிட்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்களைத் தொடர்ந்தும் நடத்தாமலிருப்பது அர்த்தமற்றது. மாகாண சபைகள் கடந்த சுமார் ஐந்து வருட காலமாக ஆளுநர்களின் ஆட்சிக்குள் தான் இருக்கின்றது. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி வடக்கு கிழக்கில் பெருமளவு காணிகள் இராணுவத்துக்காகவும், வன ஜீவராசிகள் திணைக்களத்தினாலும் அபகரிக்கப்படுகின்றது. ஆளநர்கள் அரசிடம் நல்ல பெயரை எடுப்பதற்காகவும், தமது பதவிகளை நீடித்துக் கொள்வதற்காகவும் இதனைச் செய்கின்றார்கள்.

கடந்த செவ்வாய்கிழமை கொழும்பில் பேச்சுக்கள் நடைபெற புதன்கிழமை முல்லைத்தீவில் கடற்படை முகாமுக்கு காணி அளவிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பேச்சுவார்த்தை வேளையில் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டிய அரசாங்கம், அதனைச் சிதைக்கும் வகையில்தான் செயற்படுகின்றது. கொழும்புப் பேச்சில் இணங்கியதைப் போல நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் கைதிகள் விடுவிப்பு, காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு என்பவற்றில் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தா விட்டால் இந்த சமாதான முயற்சிகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்க முடியாத நிலைதான் ஏற்படும்.

# யாழ்.மாநகரசபையின் வரவு செலவு தோற்கடிப்பு! மணிவண்ணன் பதவி விலக நிர்ப்பந்தம்!

யாழ்ப்பாண மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் கடந்த புதன்கிழமை காலை ஏழு வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஆதரவாக 11 வாக்குகள் கிடைத்த நிலையில் 18 பேர் எதிராக வாக்களித்த நிலையில் பட்ஜட் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் முதல்வர் வீ.மணிவண்ணனால் அன்றைய தினம் காலை மாநகர சபையில் பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இந்த நிலையில் மணிவண்ணனுக்கு ஆதரவளித்து வந்த ஈ.பி.டி.பி. வெளிநடப்பு செய்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியன எதிர்ப்பினை வெளியிட்டன. முதல்வரின் ஆதரவு அணியினர் மட்டும் ஆதரவாக வாக்களித்தனர்.

கூட்டமைப்பு 15 உறுப்பினர்களும், ஐ.தே.க ஒரு உறுப்பினரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களுமாக 18 பேர் பட்ஜட்டுக்கு எதிராக வாக்களித்தனர். மணிவண்ணன் அணியினர் 10 பேரும், ஐ.தே.க ஒரு உறுப்பினருமாக 11 பேர் ஆதரித்து வாக்களித்தனர். இந்த நிலையில் மேயர் மணிவண்ணனால் முன்வைக்கப்பட்ட பட்ஜட் ஏழு வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேயர் பதவியிலிருந்து மணிவண்ணன் விலகவேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், பட்ஜட்டை மீண்டும் ஒரு முறை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வழங்கப்படும். அதிலும் பட்ஜட் தோற்கடிக்கப்பட்டால் அவர் பதவி விலக வேண்டியிருக்கும் என்றும் தெவிக்கப்படுகின்றது.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலையில் மண் அள்ளிக் கொட்டியிருக்கின்றது. இதற்காக வருகின்ற காலத்தில் புரிந்து கொள்ளுவார்கள் என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான பாதீடு தோற்கடித்த பின்னரான ஊடக சந்திப்பு மாநகர முதல்வரின் அலுவலகத்தில் இடம் பெற்றது. அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்– தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் எந்தொரு கட்சியும் எதிர்ப்பதாக இருந்தால் ஏதாவது காரணத்தினினை சொல்ல வேண்டும். வரவுசெலவுத் திட்டத் தொடரிலே முதல்வர் தன்னிச்சை சட்டம் ஊடாக செயற் படுகின்றார் என கூறுவது விடயம் கிடையாது. அரசியல் ரீதியாக வரவு செலவு திட்டம் தொடர்பில் கட்சித் தலைப்பீடம் முடிவு எடுத்து விட்டனர் எதிராக வாக்களிப்பது என்று. இன்று சம்பிரதாய பூர்வமாக சபைக்கு வந்து தமது எதிர்ப்பினை உறுப்பினர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். 2021ஆம் ஆண்டு நான் மாநகர முதல்வராக பதவி வகித்ததன் பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் 2022 ஆம் ஆண்டு நடுநிலைவகித்தனர். காரணம் உடனடி தோற்கடிப்பு செய்யப்பட்டால் சபை கலைந்துவிடும் என்ற ரீதியாக நடுநிலை வகித்தனர்.

நான் பதவியேற்று தன்னிச்சையாக செயற்பட்டேன் என்று இல்லை. போன முறையும் தமிழ்தேசியகூட்டமைப்பு எதிராகத் தான் வாக்களித்தது. அரசியல் கட்சிகள் தங்களுடைய விருப்பு வெறுப்பு அப்பால் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. தாங்களுடைய அரசியல் நலனுக்காக தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுவார்கள். இதனை தமிழ்தேசியகூட்டமைப்பு தாங்கள் நலன் என (22ம் பக்கம் பார்க்க)

# முரண்படும் போலித் தேசியவாதங்கள்:- பிரச்சனையின் அடிப்படை!

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



ஆறு மாதங்களுக்கு முன்பு (கடந்த ஏப்ரல், மே, ஜீன் மாதங்களில்) இலங்கைத்தீவில் அதிசயங்களும் அற்புதங்களும் நிகழப் போவதாக ஒரு தோற்றம் உண்டானதை பலரும் மறந்திருக்கக் கூடும். ஆனால், அப்பொழுது நாடு மெல்ல மெல்ல மாற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகப் பலரும் நம்பினார்கள். அந்த நம்பிக்கையில் தான் காலிமுகத்திடலை நோக்கி நாட்டின் எல்லாத் திசைகளிலிருந்தும் மக்கள் சென்றனர். உருவாகி வந்த மக்கள் அலையையும் மாற்றத்தை நோக்கிய போராட்டச் செயற்பாடுகளையும் கண்டு ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் நடுங்கத் தொடங்கினர். அதனால் தான் அசுர பலத்தோடிருந்த ராஜபக்ஸக்கள் பதவிகளை விட்டு ஓடினர். தொடர்ச்சியாக ஆட்சி மாற்றம் மட்டுமல்ல, அரசியல் மாற்றமும் ஏற்படப் போகிறது என்று எதிர்பார்ப்புப் பலருக்கும் உண்டானது. அப்படித் தான் பேசவும் பட்டது. பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற குரல்கள் ஓங்கியொலித்தன. அமைச்சர்களும் அரசாங்கத்தில் இருந்தவர்களும் வாழ்வா சாவா என்ற அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்தனர். அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத அதிரடி மாற்றங்கள் நடந்து கொண்டேயிருந்தன.

மக்கள் புதிய நாடொன்றையும் புதிய வாழ்வொன்றையும் எதிர்பார்த்தனர். இது வரையிலும் நிலவிய இன முரண்பாட்டில் சிறியதொரு மாற்றம் ஏற்படலாம் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. இந்தச் சிறிய அழகிய நாட்டில் நாம் எல்லோரும் அவரவருடைய தனித்துவங்கள், அடையாளங்களோடு அவற்றை மதிப்பதன் மூலம் மகிழ்ச்சியாக வாழலாம் என்று பேசப்பட்டது.

ஆனால், இதெல்லாம் பின் வந்த நான்கு ஐந்து மாதங்களில் முற்றாகவே மாறி விட்டன. இப்பொழுது கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப் போல அல்லது வேதாளம் பழையபடி முருங்கையில் ஏறியதைப்போல ஆகி விட்டது.

பாராளுமன்றத்திலும் அமைச்சரவையும் ஆட்சியிலும் அதே ஆட்கள் தான் இருக்கிறார்கள். தலைமைப் பொறுப்பில் ஒன்றிரண்டு தலைகள் மட்டும் மாறியுள்ளனவே தவிர, தரப்புகளில் மாற்றம் ஏதும் நிகழவில்லை. இதனால் மாற்றங்களை விரும்பியோர் ஏமாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மாற்றங்களுக்காக முன்னிலையில் நின்று போராடிய, பாடுபட்டவர்கள் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர்.

மாற்றங்களை விரும்பாத 225 பேரும் அவர்களைக் கண்மூடி ஆதரிக்கின்ற தரப்பினரும்,

அப்பாடா, தப்பிப் பிழைத்தோம். இனி எம்மை அசைக்க முடியாதென்று தங்கள் அதிகாரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

இது வரையிலும் மேற்கொண்டு வந்த இனவாத அரசியலுக்கு அச்சுறுத்தல் வந்து விட்டது என்பதையிட்டே இவர்கள் அச்சமடைந்தனர். இதில் சிங்கள ஆளும் தரப்பினர் மட்டுமல்ல, ஜே.வி.பி உள்ளடங்கலான சிங்களக் கட்சிகளும் தமிழ்க்கட்சிகளும் உள்ளடக்கம்.

இலங்கையில் இனவாதமே அரசியலுக்கான முதலீடு. மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம் என்பது பகிரங்கமான — தெளிவான — உண்மை.

அபிவிருத்தி, சமாதானம், நல்வாழ்க்கை என்ற சொல்லை விட தமிழ்த்தேசியம், சிங்களத் தேசியம், முஸ்லிம் தேசியம், மலையகத் தேசியம் என்ற தேசியவாதச் சொற்களுக்கு ஈர்ப்பும் அதிகம். மதிப்பும் அதிகம். சிங்களத் தேசியவாதம் தமிழ்த் தேசியவாதத்தைத் தோற்றுவித்தது. பிறகு இரண்டுமாக இணைந்து முஸ்லிம் தேசியவாதத்தைத் தோற்றுவித்தன. இறுதியாக மலையகத் தேசியவாதமும் தோன்றிவிட்டது.

ஆனால், இந்தத் தேசியவாதம், மெய்யாகவே தேசியவாதமாக அல்லாமல், அநேகமாக இனவாதமாகவே சுருங்கி நிகழ்கிறது. நடைமுறையில் இங்கே எல்லாத் தரப்பிலும் இனவாதமே உள்ளது. படிமுறையில் இதன் வீரியமும் வீச்செல்லையும் வேறுபடுகிறதே தவிர மற்றும்படி ஒவ்வொன்றும் தமது காலடிக்குள் சுருங்கியே உள்ளன. இதைப் புரிந்தும் புரியாமலும் பலர் உள்ளனர்.



தெரிந்தும் தெரியாமற் சிலர் உள்ளனர்.

தமிழ்த் தேசியவாதம் தமிழர்களுக்கு மிகமிக உவப்பானது. அவசியமானது. சரியானது என்ற வகையிலேயே நோக்கப்படுகிறது. தர்க்கபூர்வமாக இதை ஏற்றுக் கொள்ளவே தோன்றும். தமிழ்த் தேசியவாதத்தின் பலமும் எழுச்சியும் தமிழர்களுடைய விடுதலைக்கு அவசியமான ஒன்று. அவர்களுக்கு ஆதாரமானது அது. அதன் மூலமே தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றெல்லாம் உணர வைக்கும். ஆனால், இதன் மறுபக்கம் வேறானது. தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியையும் அதன் பலத்திரட்சியையும் காணும் சிங்கள மக்கள் அல்லது சிங்களத் தரப்பு அச்சமடைகிறது. அது அதை எதிராகவே பார்க்கிறது. இது தான் வரலாறு முழுவதிலும் நிகழ்ந்தும் வருகிறது.

இதன் காரணமாக அது தன்னுடைய பலத்தைப் பிரயோகித்து தமிழர்களை ஒடுக்கவும் எதிர்க்கவும் முற்படுகிறது. அரசியற் சூழ்ச்சிகளின் மூலமாக தமிழ் மக்களையும் அவர்களுடைய எழுச்சியையும் பலவீனப்படுத்துகிறது. இதற்கு அது சிங்களத் தேசியவாதத்தை எழுச்சியடைய வைக்கிறது. அதற்கேற்ற மாதிரியான அரசியற் தூண்டல்களைச் செய்கிறது. இது நமக்கு தமிழர்களுக்கு எதிரானதாக மாறுகிறது. அதாவது சிங்கள தேசியவாதத்தின் எழுச்சியானது தமிழர்களுக்கு இனவாதமாகிறது.

ஆக தமிழ்த் தேசியவாதமானது சிங்கள மக்களின் நோக்கு நிலையில் தமிழ் இனவாதமாகவும் சிங்களத் தேசியவாதமானது தமிழ் மக்களின் நோக்கு நிலையில் சிங்கள இனவாதமாகவும் தென்படுகிறது.

இதற்கான அரசியற் பொறிமுறையை இரண்டு தரப்பும் மிக நேர்த்தியாகவே செய்து வருகின்றன.

நாட்டைப் பொருளாதார ரீதியில் மீட்பது, ஊழலற்ற நாடாக கட்டியெழுப்புவது, மக்கள் நலன்களுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படுவது, அனைவருக்குமான உரிமைகளைப் பற்றிச் சிந்திப்பது என்று செயற்படுவதற்குப் பதிலாக, இனவாதத்தை வளர்ப்பதிலேயே குறியாக உள்ளன. பாராளுமன்றத்திற் கூடப் பெரும்பகுதி நேரத்தை இனவாதத்துக்காகவே செலவிடுகின்றன.

இதற்கேற்ற வகையில் பிரமுகர்த்தரமான அரசியல் எதிர் மக்கள் என்ற வகையில் மேல் கீழ் என்ற அடுக்கில் (உண்மையில் இது நிலப்பிரபுத்துவ முறையிலேயே) வடிவம் கொண்டுள்ளது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரோ ஒரு அமைச்சரோ செல்லும் காட்சியை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். அப்போது அவரைச் சூழ ஒரு பெரிய அணி கூடிச் செல்லும். அவர் மக்களைச் சந்தித்தாலும் பண்ணையார் ஒருவர் சந்திப்பதைப்போலவே நடந்து கொள்வார்.

இது மக்களை கீழான நிலையில் வைத்தே ஜமீந்தார் குடிமக்கள் என்ற வகையிலே இருப்பதைக் காண முடியும். சில வேளை குறித்த பிரமுகருக்குக் குடை பிடிக்கும் வேலையைக் கூடச் செய்ய வேண்டியிருக்கும். சிலருக்கு அவர்களுடைய கால் செருப்பைக் காவுகின்ற சம்பவங்களும் நடப்பதுண்டு.

அரகலய போராட்டம் இந்தப் போக்கைக் கேள்விக்குள்ளாக்கும் நிலையை நோக்கி வளர்ந்தது. என்பதால் தான் அதையிட்டு இந்த இனவாதத் தரப்புகள் அச்சமடைந்தன. என்பதால் தான் 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று அரகலயவினர் சொன்னார்கள். என்பதால் தான் இருக்கின்ற சிஸ்டத்தை (இந்தத் தேசியவாத முலாம் பூசப்பட்ட இனவாதக் கட்டமைப்பை) உடைத்து புதிய சிஸ்டம் கிரியேற் பண்ணப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. என்பதால் தான், புதிய மாற்றங்களை விரும்புவோர் அந்தப் போராட்டத்தை ஆதரித்தனர். என்பதால் தான் அதற்கொரு புதிய தோற்றம் உருவாகியது. என்பதால்தான் அது புதுமையான ஒன்றாகக் கொண்டாடப்பட்டது.

ஆனால், அதனை அப்படியே திருகிச் சிறையில் அடைத்துப் பொது மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது அரசு.

இப்பொழுது அரசாங்கம் தமிழ் மக்களுடைய நினைவு கூருதலுக்கு அனுமதி அளித்துள்ளது. இதைக் கொஞ்சம் விரிவாக்கம் செய்து பெருந்தன்மையோடு இடமளித்தது என்று சொல்லலாம். ஆனால், இந்த இடத்தில் ஒரு கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். நினைவு கூர்தலுக்கு இடமளிக்கின்ற இந்த அரசாங்கம் மக்களுடைய நியாயமான போராட்டங்களை அங்கீகரிக்குமா? அதை அனுமதிக்குமா அதற்கு இடமளிக்குமா?

இங்கே ஒரு பொறி வைக்கப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். பொறி என்பது பெரும்பாலும் நம்மை அறியாமல் நம்மைச் சிக்கவைக்கும் ஒரு அபாயக் கண்ணியாகும்.

மீளவும் இனவாதத்தை அரசியல் முதலீடாக்கும் உபாயத்தைப் பலப்படுத்தும் முயற்சி இது. இது தனியே உள்நாட்டிலுள்ள சக்திகள் மட்டும் சம்மந்தப்பட்ட விடயமல்ல. இதைத் தான் பிராந்திய சக்திகளும் விரும்புகின்றன. மேற்கின் வல்லாதிக்கச் சக்திகளும் விரும்புகின்றன. ஆக அதிகாரத் தரப்புகளுக்கு இது தேவையாக உள்ளது. இவை எல்லாம் கூட்டுச் சேர்ந்து நம்மை மக்களைத் தங்களுடைய தின்பண்டமாக்குகின்றன. இவற்றுக்கு மக்கள் நலனோ, மக்கள் முன்னேற்றமோ, மக்களுக்கான அமைதியோ விருப்பமில்லை. அதில் அக்கறையுமில்லை.

நாமும் பலதைப் புரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ள முடியாமல் நமக்குக் கிடைக்கின்ற சிறிய இடைவெளிகளில் பெரிய நாடகங்களை நடத்தி விட முயற்சிக்கிறோம். இதையிட்டு கவலைப் படுவதா சிரிப்பதா?

ஏனிந்தக் கேள்வி என்றால், நாம் சரியாக இந்த விடயங்களைப் புரிந்து கொள்ளத் தவறினால், நம்முடைய தவறுகளுக்கான விலையை நாம் தான் கொடுக்க வேண்டும். இப்பொழுது நாம் நியாய விலையில் எந்தப் பொருளையும் பெறவில்லை. அநியாய விலையில்தான் பெறுகிறோம். இந்த அநியாய விலை கொடுப்புக்கு நம்முடைய முட்டாள்தனமும் ஒரு வகையில் காரணம்.


## மனோஜர் உடனடியாகத் தேவை

கனடாவில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்கு முழநேர - பகுதி நேர முகாமையாளர்கள் தேவை. சைவசமய ஆசாரசீல ஒழக்கமுள்ளவராகவும் ஆங்கில தமிழ் மொழி வளமுள்ளவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- செயலாளர் 547 465 3720

## ஸ்காபரோவில் வயோதிப மாதுவை வீட்டில் வைத்து பகலில் பராமரிக்க ஒருவர் உடனடியாகத் தேவை

ஸ்காபரோவில் கெனடி - பின்ஞ்ச் பகுதியில் நல்ல வசதிகளுடன் அமைந்துள்ள வீட்டில் உள்ள வயோதிபத் தாய் ஒருவரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பராமரிக்க ஒருவர் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- பரா 416 841 9600

# கடந்த காலத்தில் இருந்து விடுபட்டு புதிய வழியில் பிரச்சனைகளை கையாள ஒரு வாய்ப்பு!

கட்டுரையாளர்
கொழும்பில் இருந்து
கலாநிதி ஜெகான் பெரேரா



2023 பட்ஜெட் கணிசமான பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேறியமை பாதகமான சூழ்நிலைக்கு மத்தியிலும் அரசாங்கத்தின் பாராளுமன்ற பெரும்பான்மை உறுதியாக இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது. ஆளும் கட்சி இருபதுக்கும் அதிகமான அதன் உறுப்பினர்களை இழந்து விட்டது. அவர்கள் இப்போது கட்சியின் நிலைப்பாடுகளை பினாபற்றுவதில்லை. ஏனைய உறுப்பினர்கள், தெளிவான தலைமைத்துவம் இல்லாவிட்டாலும் கூட ஒன்றிணைந்து நிற்கிறார்கள் போன்று தெரிகிறது.

பிரிந்து சென்ற குழுக்களில் ஒன்றுக்கு தலைமை தாங்கும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆளும் கட்சி உறுப்பினர்களை கடுமையாக கண்டனம் செய்தார். எந்த ஆணை மீது கடந்த பாராளுமன்ற தேர்தலில் அந்த உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டார்களோ அந்த ஆணைக்கு அவர்கள் துரோகமிழைத்து விட்டதாக அவர் கூறினார். அரசுக்கு சொந்தமான பொருளாதார நிறுவனங்கள் உட்பட அரச சொத்துக்களை பாதுகாப்பதாக முன்னைய தேர்தல்களின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

பொதுஜன பெரமுன கடந்த தேர்தல்களில் முன் வைத்த சொந்த விஞ்ஞாபனங்களை கைவிட்டு இப்போது விசுவாசத்தை ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு காட்டுவதாக பேராசிரியர் பாராளுமன்றத்தில் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய உரையில் குற்றஞ்சாட்டினார்.

2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலிலும் 2020 பாராளுன்ற தேர்தலிலும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை மேலும் அபிவிருத்தி செய்து நவீனமயப்படுத்துவதாக வாக்காளர்களுக்கு திரும்பத் திரும்ப உறுதியளித்த பொதுஜன பெரமுன, நிதியமைச்சர் என்ற வகையில், இலாபத்தில் இயங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களைக் கூட விற்று விடுவதற்கு திட சங்கல்பம் பூண்டிருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குகிறது என்று பேராசிரியர் சுட்டிக் காட்டினார். ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகோம் உட்பட பல அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது குறித்து ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்திருக்கிறார்.

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்துவதற்கு பாதை திறந்து விடப்படுகின்றது என்பதை அரசாங்கத்தின் பட்ஜெட் யோசனைகள் தெளிவாகக் காட்டுகின்றன. அந்த நிறுவனங்களை பாதுகாக்க வேண்டும் என்று முன்னர் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களது நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய தேவை குறித்து இப்போது விளக்கமளித்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை அதன் சொத்துக்களில் சிலவற்றை விற்பனை செய்வதன் மூலமாக வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பை அதிகரிக்கா விடடால் சர்வதேச வாணிப முறைமையின் ஒரு அங்கமாக இருக்க மாட்டாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். வெளிநாட்டு நாணயக் கையிருப்பை 300 கோடி டொலர்களுக்கும் அதிகமாக அதிகரிக்கா விட்டால் இலங்கையின் வங்கிகளினால் வழங்கப்படும் கடன் பத்திரங்களை சர்வதேச கம்பனிகள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

ஆளும் கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தின் பின்னால் உள்ள உண்மையான அரசியல் (**Realpolitik**) நடைமுறைச் சாத்தியமான இலக்குகளை அடிப்படையாக கொண்ட அரசியலாகும். இங்கு இலட்சியங்களை விடவும் தப்பிப்பிழைப்பதே நோக்கமாகும். ஒரு வருடத்துக்கு முன்னர் நாட்டை உலுக்கிய பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து மூண்ட போராட்ட இயக்கம் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் செயலகங்களையும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களையும் முற்றுகையிட்டு அதன் உச்சக்கட்டத்தை அடைந்தது.



அந்த போராட்ட இயக்கம் ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவிவிலக வைத்து மக்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய நம்பகமான எந்த தலைமைத்துவத்தையும் ஆளும் கட்சிக்கு இல்லாமலாக்கியது. இத்தகைய பின்புலத்தில் தான் தனது கட்சியின் தனியொரு உறுப்பினராக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த ஐந்து தடவைகள் பிரதமாக இருந்த விக்கிரமசிங்க சவாலை ஏற்று ஆளும் கட்சிக்கு தனது தலைமைத்துவத்தை வழங்க முன்வந்தார்.

போராட்ட இயக்கத்தை படைபலத்தை பயன்படுத்தி ஒடுக்கியமை, அரசாங்கத்தின் அண்மைய வரிக் கொள்கை மற்றும் ஊழல் தொடர்பில் உறுதியான கொள்கையின்மை என்று ஜனாதிபதி விக்கரமசிங்கவின் சில நடவடிக்கைகள் கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி அரசாங்கத்தின் கடிவாளத்தை தனது கையில் எடுத்த பிறகு போராட்ட இயக்கத்துக்கான ஆதரவு வெகுவாக குறைந்து போனதுடன் ஆர்பாட்டங்களில் ஈடுபட வெளியில் வருபவர்களின் எண்ணிக்கையும் குறைந்தது.

கடுமையான பொருளாதார இடர்பாடுகள் தங்களது நுகர்வையும் சேமிப்புகளையும் பெருமளவில் குறைத்துக் கொள்ள மக்களை நிர்ப்பந்திக்கிறது. குறைந்தபட்சம் தற்போதைக்காவது மக்கள் இடர்பாடுகளை மௌனமாக பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள். கைத்தொழில் பகுதிகளில் ஆங்காங்கே சிறிய ஆர்ப்பாட்டங்கள் இடம் பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அவை பலமிக்க போராட்ட இயக்கமாக மாறுவதற்கான அறிகுறிகளை இன்னமும் காணவில்லை.

விரைவில் பொருளாதார மீட்சி பற்றிய நம்பிக்கையும் பாதுகாப்பு படைகள் பற்றிய பயமும் பெரும் எடுப்பிலான இன்னொரு சுற்று போராட்டத்துக்கு தயங்கும் மக்களின் விருப்புகளை தொடர்ந்து அடக்கிக ‘கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும், போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்த போது மக்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் இப்போது கூட மக்களுக்கு பயந்தவர்களாகவே இருக்கிறார்கள். தாங்கள் கடந்த காலத்தில் கடைப் பிடித்த அடிப்படை நிலைப்பாடுகளுக்கு எதிராக தற்போது செயற்பட வேண்டியிருந்தாலும் கூட ஒன்றிணைந்து நிற்பதற்கு அவர்கள் விரும்புகிற்ர்கள் போன்று தெரிகிறது.

வடக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களின் படங்கள ஒட்டப்பட்டிருந்த விளம்பர பலகை ஒன்றின் மீது அழுகிய தக்காளிப்பழங்களை பெண்கள் வீசுவதை காண்பிக்கும் பதிவுகளை பார்க்கக் கூடியதாக இருந்தது. அத்தகைய தென்பகுதியிலும் இருக்கும். தங்களது நிலைப்பாடுகளில் ஏற்பட்ட மாற்றத்தை நியாயப்படுத்திய அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன, ’ நாடுகளின் கடனை திருப்பிச் செலுத்தும் ஆற்றல் பற்றி மதிப்பிடும் சர்வதேச நிறுவனமான ஃபிற்ச் இலங்கையை மீண்டும் தரம் குறைத்திருக்கிறது. இலங்கையை யார் ஆட்சி செய்தாலும் அவர்கள் அதே பிரச்சினையை எதிர்கொள்வார்கள். நாம் எமது வெளிநாட்டு நாணய கையிருப்பதை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்’ என்று கூறினார்.

இத்தகைய இடர்மிக்க சூழ்நிலையில், ஜனாதிபதி விக்கிரமசிங்க தாமதமின்றி நாட்டின் இனநெருக்கடிக்கு தீர்வைக் கண்டு தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டு வரும் தனது நோக்கத்தை அறாவித்திருக்கிறார். இதற்கு அவர் இலங்கை அதன் 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடப் போகும் அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதியை இலக்காக தெரிவு செய்திருக்கிறார். இது சாத்தியமற்ற ஒரு கனவு என்று நிராகரிக்கப்படக்கூடும்.

இனநெருக்கடி என்பது பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நீடித்து வருகின்ற ஒன்றாகும். இந்த நெருக்கடி சுதந்திரத்துக்கு வெகு முன்னதாகவே காலனித்துவ ஆட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டதாகும். இலங்கையின் தலைவர்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட சுயாட்சிக்கான கோரிக்கைக்கு பதிலளித்த காலனித்துவ ஆட்சியாளர்கள், இலங்கையில் வாழ்பவர்கள் ஐக்கியம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வை பெருமளவுக்கு வெளிக்காட்டியிருந்தால் முழுமையான பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை அவர்களிடம் கையளிப்பதற்கு இருக்கக்கூடிய தடை நீங்கியிருக்கும் என்று குறிப்பிட்டனர். பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளினால் அடையாளம் காணப்பட்ட இலங்கைச் சமூகத்தின் பிளவுபட்ட தன்மையை இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

1957 பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப ’பட்டது. அதைத் தொடர்ந்து வந்த 1965இல் டட்லி சேனநாயக்க, செல்வநாயகம் ஒப்பந்தத்தையும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1987 இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையை ஓரளவுக்கு மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. 2000 சந்திரிகா குமாரதுங்கவின் அரசியலமைப்பு வரைவு பாராளுமன்றத்தில் எரிக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் 2010 சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளை அரசாங்கம் பரிசீலனைக்குக் கூட எடுக்கவில்லை. சிறிசேன – விக்கிரமசிங்க அரசாங்க காலத்தில் 2015 அரசியலமைப்புச்சபை பல்வேறு யோசனைகளை முன்வைத்தது.

மறு வார்த்தைகளில் கூறுவதானால், இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு பல தடவைகள் தயாரிக்கப்பட்டன. அந்த தீர்வுகள் அந்தந்த காலகட்டங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்களினால் அல்லது அவற்றில் இருந்த சில பிரிவினரால் ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய சூழ்நிலையும் இருந்தது. ஆனால் எதிரணியினால் நிராகரிக்கப்பட்டன.

இத் தடவை இலங்கையின் வரலாற்றிலேயே மிகவும் தீவிரமான இராணுவவாத, இனத்துவ தேசியவாத கட்சி என்று அடையாளப்படுத்தக்கூடிய பொதுஜன பெரமுன அதன் குறுகிய கால ‘உயிர்வாழ்வுக்காக’ இனவாதமற்ற ஒரு அரசியல் தலைவர் மீது தங்கியிருக்கிறது. இது மீண்டும் வர முடியாத ஒரு வாய்ப்பாகும். இதை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

அடுத்த சுதந்திர தினம் அளவில் இனநெருக்கடிக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க செய்யும் அறிவிப்பு பட்ஜெட்டை நிறைவேற்றியதில் காட்டிய செயற்திறமையை இன நெருக்கடிக்கான அரசியல் தீர்விலும் காட்டமுடியும் என்ற அவரது நம்பிக்கையை பிரதிபலிப்பதாக இருக்கலாம். அந்த தீர்வுக்கான உருவரைபுகள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நாடு ஒன்றுபட்டுச் செயற்படா விட்டால் எதிர்காலம் என்று ஒன்று இருக்க முடியாது. தற்போதைய நெருக்கடியை நாடு கையாள ஒன்றுபடுவதற்கு அரசியல் தீர்வு அடிப்படை என்று தோன்றுகிறது.

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”
தொடர்புகளுக்கு 416 841 9600

# தமிழர் அரசியல் மீண்டும் பலம் பெறுமா?

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் காலமாகி 16 வருடங்களாகின்றன. கடந்த 14ம் திகதி, அவரது பதினாறாது நினைவுதினம். அதற்கு முதல் நாள் தான், தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ரணில் விக்கிரசிங்கவின் சர்வகட்சி கூட்டம் இடம் பெற்றது. இந்த கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்கு பற்றியமை தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. நிபந்தனையுடன் பேசியிருக்க வேண்டுமென்று ஒரு கருத்து முன் வைக்கப்படுகின்றது. சமஸ்டியை ஏற்றுக் கொண்டால் மட்டுமே சிங்கள தரப்புடன் பேச வேண்டுமென்று, இன்னொரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. மூன்றாம் தரப்பு இல்லாமல் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ளக் கூடாதென்று, இன்னொரு பார்வை முன்வைக்கப்படுகின்றது. இவைகள் எவையுமே தவறான கருத்துக்கள் அல்ல. ஏனெனில் சிங்களவர்களோடு பேசிப், பேசி ஏமாந்து போனதே தமிழர் வரலாறு. ஆனால் இந்த இடத்தில் எழும் கேள்வி இவற்றையெல்லாம் அழுத்திக் கூற, அடம்பிடிக்க, பேரம்பேச, நம்மிடமுள்ள பலம் என்ன?

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்குமிடையிலான பேச்சுவார்த்தையின் முதல் நாளில், அன்ரன் பாலசிங்கம் கூறுகின்றார். அவரது குரல் மிகவும் கம்பீரமாக ஒலிக்கின்றது. ஆயுதக் களைவு விடயத்தில் சமரசமில்லை. அது எங்களுடைய மக்களின் அதிகாரமாகும். அது தமிழர்களின் பேரம் பேசும் பலம். அது எங்களுடைய மக்களின் பாதுகாப்பிற்கான கருவி.

இதற்கு சிறிலங்கா அரசிலிருந்து எந்தவொரு எதிர்ப்பும் வரவில்லை. ஏனெனில் எதிர்க்க முடியாது. எதிர்த்தால் பேச்சுவார்த்தை இடம் பெறாது. உண்மையில் பாலசிங்கம் பேசவில்லை, பிரபாகரனது இராணுவாற்றல் அவரை அவ்வாறு பேச வைத்தது. தமிழர்கள் உச்ச பலத்தோடிருந்த காலத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையது. அது இனிமையான நினைவுகளை தரவல்ல கடந்தகாலம். கடந்த காலம் என்ன தான் அற்புதமான உணர்வை தந்தாலும் கூட, நிகழ்காலத்தில் அதற்கு எவ்வித பெறுமதியும் இல்லை. எங்கள் தாத்தாவிற்கு ஒரு யானையிருந்ததென்று, கூறுவதைப் போன்ற ஒன்று தான் இதுவும். யானை தாத்தாவிடம் இருந்திருக்கலாம் ஆனால் நம்மிடம்?

தமிழ் தேசிய அரசியலை நான்கு கட்டங்களாக பிரிக்கலாம். ஒன்று, செல்வநாயகம் காலகட்டம். இரண்டு விடுதலை இயக்கங்களின் காலகட்டம். மூன்று, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலகட்டம். நான்கு சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காலகட்டம். இந்த பின் புலத்தில் நோக்கினால், தமிழர்கள் கொழும்மை நிர்பந்திக்கும் பலத்தோடிருந்த காலமாக, இரண்டு கால கட்டங்களைத் தான் குறிப்பிட முடியும். மேற்படி இரண்டு காலகட்டங்களும் தமிழர்கள் ஆயுத பலத்துடனிருந்த காலகட்டங்களாகும்.

அன்று 36 ஆயுத இயக்கங்கங்கள் இருந்ததாக ஒரு பதிவுண்டு. சிலர் இதனை 32 என்றும் பதிவிடுக்கின்றனர். இதனை சிலர் வேடிக்கையாக சொல்வதுண்டு. ஆங்கில எழுத்துக்கள் அனைத்தையும் முன்னுக்கு பின்னாக போட்டுக் கொண்டு உருவாக்கப்பட்ட இயக்கங்கள். ஐந்து இயக்கங்கள் மட்டுமே இதில் பிரதானமாக பேசப்பட்டது. இயக்கங்களின் அன்றைய ஆளணி, சிறிலங்கா இராணுவத்தை விடவும் மூன்று மடங்கென்று சொல்வார்கள். இந்த இயக்கங்களின் பிரதான இலக்கு என்னவாக இருந்தது? மிதவாதிகளால் அடைய முடியாமல் போன தனிநாட்டை ஆயுத பலம் கொண்டு அடைவது தான் இவர்களுடைய இலக்காக இருந்தது. இந்த இயக்கங்கள் அனைத்தும் இறுதியில் சிறிலங்காவிற்கு ஒரு பலமான இராணுவத்தைத் தான் உருவாக்கிக் கொடுக்கப் போகின்றன என்று தங்களுடைய ஆசிரியர் ஒருவர் கூறியதாக ஒரு




நண்பர் என்னிடம் கூறினார். இன்று திரும்பிப்பார்த்தால் அப்படித ' தான் நடந்திருக்கின்றது.

தமிழர்கள் பலத்துடனிருந்த முதல் காலகட்டமும், இரண்டாவது கால கட்டமும் இயங்கங்களின் காலகட்டம் தான். ஒரு வேறுபாண்டு. அதாவது, முதல் கட்டத்தில் இயங்கங்கள் இரண்டாவது கட்டத்தில் இயக்கம். இயக்கங்களின் முதல் கட்டத்தில் ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டு, அதன் விளைவாகவே திம்புப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. அதன் பெறுபேறாகவே இந்திய–இலங்கை ஒப்பந்தம் இடம் பெற்றது. மாகாண சபை முறைமை ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் இராணுவ பலத்தின் விளைவாகவே, ஒஸ்லோ பேச்சுவார்த்தை இடம்பெற்றது. ஆனால் இந்த பேச்சுவார்த்தையின் விளைவாக எதனையும் அடைய முடியவில்லை மாறாக, தமிழர்களின் ஒட்டுமொத்த பலமும் அழிக்கப்பட்டது. திம்பு பேச்சுவார்த்தைக்கும், ஒஸ்லோ பேச்சுவார்த்தைக்கும் இடையில் ஒற்றுமையுமுண்டு. அதேவேளை வேற்றுமையுமுண்டு. ஒற்றுமை, இரண்டிலும் மூன்றாம் தரப்பிருந்தது. வேற்றுமை, இந்திய தலையீட்டினதும் நோர்வேயின் தலையீட்டினதும் கனதி முற்றிலும் வேறானது. இந்திய தலையீட்டின் போது, இந்தியா, கொழும்மை நிர்பந்திக்கும் சக்தியாக இருந்தது. ஆனால் ஒஸ்லோ பேச்சுவார்தையின் போது, நோர்வே ஒரு நிர்பந்திக்கும் சக்தியாக இருக்கவில்லை.

இந்த பின்புலத்திலிருந்து தான் சம்பந்தனின் காலகட்டத்தை நோக்க வேண்டும். 2009இற்கு பின்னர் தமிழ் தேசிய அரசியல் நிலைமை முற்றிலும் மாற்றமடைந்தது. உண்மையில் 2009 இற்கு முன்னரான தமிழ் தேசிய அரசியலானது, இராணுவ ஆற்றல் மீதான நமபிக்கையின் வழியாகவே நோக்கப்பட்டது. 2009இற்கு பின்னர், நிலைமைகள் பழைய மிதவாத அரசியலை நோக்கித் திரும்பியது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்போது சம்பந்தனது தலைமையின் கீழ் வந்ததோ, அப்போதே தமிழ் தேசிய அரசியல் பழைய மிதவாத அரசியலுக்கள் பிரவேசித்து விட்டது. ஆனால் முன்னரை விடவும் அது பலவீனமாகவே காட்சியளித்தது. ஏனெனில் சம்பந்தன் ஒரு தேசிய இயக்கத்திற்கு தலைமை தாங்கக் கூடிய ஆற்றலுள்ள ஒருவர் அல்ல. ஏனெனில் அவரிடம் இயல்பிலேயே மோதும் பண்பில்லை. அப்படியான பண்பு அமிர்தலிங்கத்திடமிருந்ததாக சொல்வார்கள். ஒரு மூத்த தலைவரென்னும்தகுதியை கொண்டே, சம்பந்தன் கூட்டமைப்பை வழநடத்த முற்பட்டார். ஆனால் அதனைக் கூட அவரால் சரிவரச் செய்ய முடியவில்லை. 2009இற்கு முன்னரான தமிழ் தேசியக் கூட்டமைப்பானது, விடுலைப் புலிகளின் தேர்தல் முகமாக மட்டுமேயிருந்தது. சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து எதை எதிர்பார்க்கலாம்? ஏற்கனவே தோல்வியடைந்த மிதவாதிகளால் புதிதாக எதைச் செய்ய முடியும்? இந்தக் கேள்விகளிலிருந்து தான்,

2009இற்கு பினனரான அரசியலை மதிப்பிட வேண்டும். மிதவாதிகளால் எதனையுமே கையாள முடியாமல்




போனதால் தான், ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்த அமிர்தலிங்கம், மாகாண சபை தேர்தலில் போட்டியிட மறுத்தார். இந்தப் பின்புலத்தில் தான், விடுதலை இயக்கங்கங்களில் ஒன்றான, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அந்த இடத்தை நிரப்பியது. அதாவது, மாகாண சபைக்கு வடிவம் கொடுப்பதற்கும் ஒரு இயக்கம் தான் தேவைப்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில், இன்றுள்ள அரசியல் கட்சிகளால் கொழும்மை நிர்பந்திப்பதற்கு என்ன செய்ய முடியும்?

இந்தக் கேள்வியிலிருந்து தான், நாம், இன்றைய சூழலை மதிப்பிட வேண்டும். விமர்சிக்க வேண்டும். கோபப்பட வேண்டும். குற்றச் சாட்டுக்களை முன் வைக்க வேண்டும். நடக்க முடியாத ஒருவரைப் பார்த்து ஏன் நீங்கள் நடக்கவில்லையென்று கேட்கலாமா? இன்றுள்ள சூழலில் பேச்சுவார்த்தையை எவ்வாறு கையாளலாமென்று கூறுகின்ற போது, இந்த அரசியல் யதார்த்தத்தை நாம் மறந்து விடக் கூடாது. 2009இற்கு பின்னரான சூழலில், கொழும்மை நிர்பந்திக்கும் பலத்தை தமிழர்கள் முற்றிலும் இழந்துவிட்டனர். இந்தச் சூழலில் போரின் இறுதிக் காலத்தில் இடம் பெற்றதாக நம்பப்படும் மனித உரிமை மீறல்களையே ஒரு துருப்புச் சீட்டாக நாம் கையாண்டு வருகின்றோம் ஆனால் அதிலும் ஒரு பிரச்சினையுண்டு. கடந்த 13வருடங்களாக பொறுப்பு கூறல் விடயத்தை கொழும்பு ஏதோவொரு வகையில் இழுத்தடித்தே வருகின்றது. கொழும்பால் இவ்வாறு இழுத்தடிக்க முடிகின்றதென்றால், இங்கு கொழும்பு மட்டும் பிரச்சினையில்லை — மாறாக, அவ்வாறானதொரு வாய்ப்பு சர்வதேச பொறிமுறையில் இருக்கின்றது என்பதையே நாம் உற்றுநோக்க வேண்டும்.

இந்த பின்புலத்தில் நோக்கினால். உள்நாட்டில் பலமில்லை. பிராந்திய சக்தியான இந்தியாவின் நிலைப்பாடு இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் மட்டுப்பட்டிருக்கின்றது. அமெரிக்காவின் கரிசனையோ, மனித உரிமைகள் விவகாரத்தை தாண்டி அசைவதாக இல்லை — அரசியல் தீர்வு தொடர்பில் அவர்கள் இதுவரை உச்சரித்ததில்லை. ஐ.நா மனித உரிமைகள்

**கட்டுரையாளர்:**
**தாயகத்தில் இருந்து**
**– யசீந்திரா –**



பேரவையின் அழுத்தங்கள் நமது எதிர்பார்ப்புக்களை சிறியளவில் கூட, பூர்த்தி செய்யவில்லை. இந்த நிலையில் என்ன செய்ய முடியும்? கொழும்பிற்கு நிபந்தனை வைக்கலாம். சமஸ்டியை பகிரங்கமாக அறிவித்தால்தான், நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருவோமென்று உரத்து பேசலாம் ஆனால், அதற்காக அவர்களை எவ்வாறு நிர்பந்திப்பது?

இந்த இடத்தில் தமிழர்கள் என்ன தான் செய்வது? நாம் எப்போது மீளவும் பலம் பெறுவோம்? எப்போது முன்னைய கம்பீரத்துடன் பேசச் செல்வோம்? எந்த ஆய்வாளரிடம், எந்த புத்திஜீவிடம், எந்த சிவில் சமூகத்திடம் இதற்கு பதிலுண்டு. புலம்பெயர் அமைப்புக்களிடம் பதிலிருக்கின்றதா?

ஒரு மொங்கோலிய கூற்றுண்டு. அதாவது, குதிரை கிடைக்கும் வரையில் கழுதையை ஓட்டுங்கள். இப்போது அந்தக் கழுதை எதுவென்பதில் தானே நமக்குள் விவாதங்கள் இடம்பெறுகின்றன. இப்போது, 13 என்னும் எண்ணை உச்சிரித்தாலே, மகா பாவம் என்பது போல் சிலர் சிலிர்த்துக் கொள்கின்றனர். அனைவரையும் நோக்கி இந்தக் கட்டுரையாளர் ஒரு கேள்வியை முன் வைக்கின்றார். மனச்சாட்சிப்படி பதில் கூறுங்கள். கடந்த 73 வருடகால தமிழ் தேசிய அரசியல் பயணத்தின் போது, நாம் கொள்கை வழியில் மட்டும்தான் பயணித்திருக்கின்றோமா? நாம் கொள்கை தவறியதேயில்லையா? சூழ்நிலைக ருதி சிந்தித்ததில்லையா — செயற்பட்டதில்லையா?

சமஸ்டிக் கோரிக்கை முன் வைத்த செல்வநாயகம் எந்த அடிப்படையில் பண்டா–செல்வா, டட்லி–செல்வா உடன்பாடுகளுக்கு சென்றார். தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எந்த அடிப்படையில் மாவட்ட சபைக்கு இறங்கினர்? எந்த தமிழ் தேசிய கொள்கையின் அடிப்படையில், தமிழரசு கட்சி, 1965இல், டட்லி சேனநாயக்க தலைமையிலான, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்து, அமைச்சரவையிலும் பங்கு கொண்டது?

ஜம்பதிற்கு ஜம்பது கோரிய ஜி.ஜி. பொன்னம்பலம், டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஜக்கிய தேசியக் கட்சியில் அமைச்சராக இருந்த கதையை மறக்க முடியுமா? இவைகள் அனைத்தும் எந்த தமிழ் தேசிய கொள்கையின் அடிப்படையில் இடம் பெற்றன? இவற்றுக்கு பதில் என்ன? இவற்றுக்கான பதில் தந்திரோபாயமென்றால் — ஏன் இருக்கின்ற ஒரேயொரு துருப்புச் சீட்டான மாகாண சபையை உச்சபட்டசமாக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? அது ஏன் ஒரு தந்திரோபாயமாக இருக்க முடியாது? இல்லை! இது பச்சைத் துரோகமென்றால், முன்னர் இடம்பெற்றவைகளையும் பச்சைத் துரோகமென்று அறிவிக்கும் துனிவுண்டா? இன்று சூழ்நிலை கருதி,(22ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத்தீவு மீதான இந்தியாவின் நகர்வு நிரந்தரமான வெற்றியைக் கொடுக்குமா?

கடந்த இரு மாதங்களுக்கு மேலாக இலங்கை – இந்திய இராஜீக உறவில் நிலவிய விரிசல் சுமுகமாக மாறுகிறதா என்ற கேள்வி நியாயமானதாகவே உள்ளது. குறிப்பாக இலங்கையின் அரசியலில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இத்தகைய முறுகல் இரு நாட்டுக்குமிடையில் நிலவி வந்தது. அதற்கு அடிப்படைக் காரணமாக சீன தொழில்நுட்பக் கப்பலான யுவான் வாங் –5 கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்த பின்னர் அத்தகைய முறுகல் தீவிரமடைந்தது.

இந்தியா மட்டுமன்றி அமெரிக்காவும் அத்தகைய நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியது. சீன–இலங்கை உறவு பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறி வருவதனை கவனத்தில் கொண்ட இந்தியா, இலங்கையை தனது செல்வாக்குக்குள் கொண்டு வர அதிக இராஜீக அழுத்தங்களை பிரயோகித்தது. அதனை வெளிப்படையாக கண்டு கொள்ளக் கூடியதாகவே கொழும்பின் திணறல் தெரிந்தது. ஆனால் அத்தகைய சூழலை தற்போது கொழும்பு மாற்றிக் கொண்டுள்ளதாகவே தெரிகிறது.

இக்கட்டுரையும் அத்தகைய மாற்றத்தையும் அதற்கான அடிப்படை

வெளியுறவுத்துறை அமைச்சில் ஒரு தனிப் பிரிவு அமைக்கப் பட்டுள்ளது என்றார். இவ்வாறே அண்மையில் திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் தொடர்பில்



எழுந்த சர்ச்சையையும் இந்தியத் தூதுவரது விஜயம் கையாண்டிருந்தமை கவனத்திற்குரியதாகும். இது ஏறக்குறைய சீனாவின் மென் அதிகார வெளியுறவுக் கொள்ளையில் கட்டமைக்கப்படும் கென்பூரியஸ் ஒழுங்கமைப்பு போன்றதாகவே தெரிகிறது. உலகளாவிய ரீதியில் சீனா 300 க்கும் மேற்பட்ட

இந்தியாவின் தென்பகுதி ,ந்தியாவின் செல்வாக்கு பகுதியாக அமைவது அவசியமானதாகவே உள்ளது. அதற்கமைவான நகர்வுகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. தென்னிலங்கை

யிலும் வடக்கு, கிழக்கிலும் இந்தியா தனது கடற்படை நகர்வையும் விமான சேவையின் நகர்வையும் அதிகரித்துள்ளது. இவை அனைத்துமே சீனாவின் ,லங்கைத்தீவின் மீதான கவனத்தை கையாளும் உத்தியாகவே உள்ளது. சீனக் கப்பல் வருகையை அடுத்து ஏற்பட்ட சூழலை வெற்றிகரமாக

தையே அடையாளப்படுத்துகிறது. பாரதீய ஜனதாக் கட்சியின் இந்துத்துவ அரசியல் பரிமாணத்தை இலங்கைத் தீவில் வெளிப்படுத்தினாலும் அதன் நகர்வு அனைத்துமே இந்தியாவின் பாதுகாப்புச் சார்ந்த கட்டுமானத்தையே கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது. மென் அதிகாரத்தின் அங்கமான மதமும் மத நிறுவனங்களினால் உருவாக்கப்படும் மதப் பண்பாட்டு அடையாளங்களும் இந்திய ஆட்சியாளர்


**கட்டுரையாளர்**
**தாயகத்தில் இருந்து**
**பேராசிரியர்**
*K.T.*கணேசலிங்கம்




களால் இலங்கைத்தீவின் செல்வாக்கை அதிகரித்துள்ளது. அது ,இந்துத்துவத்தின் அடிப்படை என்பதை விட ,ந்தியப் பாதுகாப்பின் அடிப்படையெனக் கருதுவது சாதகமானதாகவே தெரிகிறது. இதில் இந்தியா வெற்றி பெற்றுள்ளதாகவே வெளித்தோற்றம் தெரிகிறது. ஆனால் அது முழுமையானதாக அமைந்துள்ளதா என்ற கேள்வி பிரதானமானது.

ஆனால் இந்தியாவின் இத்தகைய நகர்வை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் முழுமையாக ஏற்றுள்ளார்கள் என்று கருத முடியாதுள்ளது. காரணம் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு இந்தியாவின் அழுத்தத்திற்கு பணிந்துள்ளதாகவே தெரிகிறது. பலாலி விமான சேவை முழு இலங்கைத்தீவுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ள பொருளாதார வாய்ப்புகளையும் இந்தியாவின் அழுத்தங்களையும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் வெற்றிகரமாக முகங்கொடுக்க முயன்றுள்ளதாகவே தெரிகிறது. இது தென்னிலங்கையின் தற்காலிக விட்டுக் கொடுப்பாகவே தெரிகிறது. இவ்வாறு பல விட்டுக் கொடுப்புகளைச் செய்து நிரந்தரமான வெற்றிகளை எட்டியவர்கள் (21ம் பக்கம் பார்க்க)

களையும் தேடுவதாக உள்ளது. முதலாவது, 33 மாத கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாண–சென்னை விமான சேவை 12.12.2022 அன்று ஆரம்பமாகியது. விமான சேவையின் தொடக்கம் அதிக இழுபறியை அடுத்து தொடங்கப்பட்டதுடன், யாழ்ப்பாணம் பாண்டிச்சேரிக்கும் இடையில் படகுச் சேவையையும் விரைவில் ஆரம்பிக்கப் போவதாக இந்திய துணைத் தூதுவர் ராஜேஸ் நட்ராஜ் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது குறிப்பிட்டிருந்தார்.

அதனை அமைச்சர் நிமால் சி றிபால டி சில்வா உறுதிப்படுத்தியிருந்தார். இதே நேரம் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவிக்கும் போது, இரு நாட்டு மக்களிடையேயும் பாரம்பரிய உறவுகள் வலுப்படுத்தப்படுவதோடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகள் மேம்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது, இந்திய கடற்படைத் தளபதி ஆர்.ஹரிகுமார் 4 நாள் விஜயமாக 13.12.2022 அன்று கொழும்பை வந்தடைந்தார். இலங்கையின் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகெதென்னவின் அழைப்பின் பெயரில் வருகை தந்த இந்திய கடற்படைத் தளபதியை இலங்கையின் கடற்படைத் தளபதி வரவேற்றார். அவர் திருகோணமலை கடல்சார் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொள்வதுடன், இலங்கையின் பாதுகாப்பு மையங்களுக்கு விஜயம் செய்வார் எனவும் தெரிய வருகிறது. இலங்கை–இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

மூன்றாவது, தேவாரப்பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரத்தை மீட்டதன் மூலம் இலங்கையில் இந்தியா மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் காசியில் நிகழ்ந்த விழாவொன்றில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது, பிரதமர் மோடி பதவியேற்ற பின்னர் எமது கலாசாரத்தையும் மரபுரிமையையும் பாது காப்பதோடு ,வ்வாறு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் ஒத்துழைப்பை வழங்குவதற்காகவும்

கலாசார மையங்களை (2015 வரையும்) அமைத்து தனது மரபுகளையும் கலாசாரத்தையும் பரப்பி வருகிறது என்பது கவனத்திற்குரியதாகும்.

நான்காவது, இந்தியக் கடற்படையின் போர்க் கப்பலான ஐ.என்.எஸ். சாயத்ரி மூன்று நாள் உத்தியோகபூர்வமான விஜயமாக 14.12.2022 அன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இலங்கைக் கடற்படையினால் கப்பலுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இருநாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான நட்புறவை வளர்க்கும் வகையில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இலங்கையின் மேற்கு கடற்படை கட்டளைக்குட்பட்ட கடற்பரப்பில் கடற்படை கூட்டுப் பயிற்சியையும் இரு நாட்டு கடற்படையும் மேற்கொள்ளும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் மேற்குறித்த நகர்வுகள் அனைத்தும் அதன் இலங்கைத்தீவு மீதான அணுகுமுறையை படம்பிடித்துக் காட்டுகிறது. வெளிப்படையாகக் கூறுவதாயின் இலங்கை சீன உறவை அடிப்படையாகக் கொண்டு இந்தியா இலங்கை மீதான செல்வாக்கினை பலப்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை தடுத்துக் கொண்டு இந்தியாவின் கணிசமான அடைவை எட்டியுள்ளதாகவே தெரிகிறது.

இதனால் இந்தியா ஆரோக்கியமான நகர்வொன்றை இலங்கைத்தீவில் ஏற்படுத்தியுள்ளது. அதாவது நீண்டகாலமாக தடைப்பட்டிருந்த பலாலி சர்வதேச விமானச் சேவையானது, இந்தியாவின் வர்த்தக மற்றும் சுற்றுலாத் துறையின் விருத்திக்கான நடவடிக்கையாக அமைந்தாலும் தமிழர் வாழும் பகுதியுடனான உறவு பலப்படுத்தியுள்ளதுடன், சீனாவின் வடக்கு மீதான நகர்வுகளை கண்காணிப்புக்கான களமாக விமான சேவை அமையவுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

அதாவது இந்தியாவின் அவதானிப்பும் தொடர்ச்சியான நடமாட்டமும் வடக்கை நோக்கி அமைய வாய்ப்புள்ளது. ,ந்தியா தனது தென்பகுதி இராணுவ மற்றும் தொழில்நுட்ப தளங்களைப் பாதுகாப்பதற்கான வாய்ப்பாக வடக்கு மீதான நகர்வு ஏற்படுத்தியுள்ளதாகவே தெரிகிறது. சீன இந்திய எல்லை முரண்பாடு கூர்மையடையும் போது

இந்தியா கையாளுவதாகவே கருதுகிறது. அதற்கான அணுகுமுறையை இந்தியத் தூதுவர்களது உரைகளிலும் வெளிப்படுத்தும் செய்திகளிலும் உணரக் கூடியதாக அமைந்துள்ளது.

காபியில் நிகழ்ந்த பாரதியார் விழாவில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சரது செய்தி திருக்கேதீஸ்வரத்தின் முக்கியத்துவத்தைக் காட்டிலும் இலங்கைத்தீவுடனான இந்தியாவின் அரசியல் உறவின் முக்கியத் துவத்


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அதிகரிக்கும் இந்திய கரிசனை?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





நான்கு நாட்கள் பயணமாக இலங்கைக்கு வந்த இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ஹரிகுமார் இரண்டு நாடுகளின் படைகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து, ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசியல் தலைவர்களுடனும், படைத் தளபதிகளுடனும் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

இந்திய கடற்படைத் தளபதி கொழும்பு வந்தடைந்த சற்று நேரத்திலேயே, இந்தியக் கடற்படையின் பாரிய ஏவுகணைப் போர்க்கப்பலான ஐ.என்.எஸ். சாயத்ரி கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைந்தது. அவர் புறப்பட்டுச் சென்ற போது கூடவே அதுவும் வெளியேறியது. இந்த இரண்டு பயணங்களும், ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை எனக் கூற முடியாது.

அண்மைக் காலமாக சீனாவுடனான இலங்கையின் உறவுகள் விவகாரத்தில், இந்தியா மனக்கசப்புகளைக் கொண்டிருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில், சீன கடற்படையின் 'யுவான் வாங் 5' என்ற செய்மதி மற்றும் ஏவுகணை வழித் தடக் கண்காணிப்புக் கப்பல் தரித்துச் சென்றதும், அதன் பின்னர் ஆழ்கடலில் சீன போர்க்கப்பல்களுக்கு இலங்கை எரிபொருள் நிரப்புவதாக வெளியான தகவல்களும், இரு தரப்பு உறவுகளில் சந்தேகங்களுடன் கூடிய இடைவெளியை உருவாக்கியுள்ளது.

இவ்வாறான வெளிப் பாதுகாப்பு ரீதியாக இந்தியாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தி விடக் கூடாது என்பதில் புதுடில்லி உறுதியாக உள்ளது.

'யுவான் வாங் 5' கப்பல் அம்பாந்தோட்டைக்கு வரவிருந்த நிலையில், இந்திய கடற்படைத் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் கோர்மடே கொழும்பு வந்து, கடல் கண்காணிப்புக்குப் பயன்படுத்தப்படும் டோனியர் விமானத்தை இலங்கையிடம் கையளித்திருந்தார்.

தங்களது சொல்லையும் மீறி அந்தக் கப்பலை அம்பாந்தோட்டைக்குள் அனுமதிப்பதை, புதுடில்லி கோபத்துடன் அணுகியிருந்தால், அந்த நிகழ்வு குறிப்பிட்ட நாளில் இடம் பெறாமல் போயிருக்கலாம். ஆனால் இந்தியா அந்த நிலையிலும் நிதானமான போக்கை கடைப் பிடித்தது. பாதுகாப்பு ரீதியான ஒத்துழைப்புகள், உறவுகளுடன் முரண்படாமல் அரசியல் ரீதியாக அந்த வெறுப்பை வெளிப்படுத்தியது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஐந்து மாதங்களாகியும் அவருக்கு இன்னமும் புதுடில்லி அழைப்பு விடுக்காமல் இருப்பது அதன் ஒரு கட்டம் தான். அதே வேளை பாதுகாப்பு ஒத்துழைப்புகள், உறவுகளைப் பலப்படுத்துவதற்கான முழுமையான நடவடிக்கைகளையும் இந்தியா மேற் கொண்டு வருகிறது.

அதன் ஒரு கட்டமாகத் தான், இந்தியாவின் வெளியகப் புலனாய்வு அமைப்பான 'றோ'வின் தலைவரான சமந்த் குமார் கோயல் கடந்த மாதம் 21ஆம் திகதி கொழும்புக்கு பயணம் மேற் கொண்டிருந்தார்.

அந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களை 'றோ' தலைவர் சமந்த் குமார் கோயல் மூடிய அறைக்குச் சந்தித்துப் பேசியதாக தகவல்கள் வெளியாகின.

ஆனால் அந்தப் பேச்சுக்களின் விபரங்கள் ஏதும் அதிகாரபூர்வமாக வெளியாகவில்லை.

1987இற்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் அளித்த, சமஷ்டி உள்ளிட்ட அதிகாரப் பகிர்வுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தினார் என்றும் ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

ஆனால் எல்லாமே உறுதிப்படுத்தப்படாத தகவல்களாகத் தான் இருக்கின்றன. 'றோ' தலைவர், கொழும்பு வந்தாரா? ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினாரா? என்ன பேசினார் என்றெல்லாம், அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன விடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு அவர், 'றோ' தலைவர் ஜனாதிபதியைச் சந்தித்தாரா என்பது தனக்குத் தெரியாது என்றும், அவ்வாறு சந்தித்திருந்தால், பேசப்பட்ட விடயங்கள் குறித்து பாராளுமன்றத்தில் ஜனாதிபதி வெளிப்படுத்துவார் என்றும் கூறியிருந்தார். கடந்த வாரமும் இந்த சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, அமைச்சர் பந்துல குணவர்த்தன அளித்த பதில் வேறுவிதமானதாக இருந்தது,

'றோ தலைவரைச் சந்தித்து என்ன பேசினீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேட்கிறார்கள் என ஜனாதிபதியிடம் கேட்டேன்.

அதற்கு, புலனாய்வுத்துறை அல்லது பாதுகாப்பு தொடர்பான தகவல்களை வாராந்த பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்று ஜனாதிபதி கூறினார்,' என அமைச்சர் பந்துல குணவர்தன பதிலளித்திருந்தார்.

அதாவது 'றோ' தலைவருடனான சந்திப்பை அரசாங்கம் ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் என்ன பேசப்பட்டது என்பதை பகிரங்கப்படுத்த தயாராக இல்லை. பாராளுமன்றத்துக்கு அது பற்றி அறி வெளிப்படைத் தன்மையுடன் கூறுவதற்கு ஜனாதிபதி தயாரில்லை.

ஏற்கனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட உடன்பாட்டை பாராளுமன்றத்தில் முன் வைக்குமாறு எதிர்க்கட்சிகள் கேட்ட போது, அதனை இப்போது முன் வைக்க முடியாது என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

இப்போது 'றோ' தலைவர் சமந்த் குமார் கோயலுடனான சந்திப்பு விபரங்களை வெளிப்படுத்தவும் அவர் மறுத்திருக்கிறார்.

பாதுகாப்பு இரகசியங்களை பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் சந்திப்பு நடந்ததை, பொதுவாக சில விடயங்கள் பேசப்பட்டன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அது அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மை மீது சந்தேகம் கொள்வதை தடுத்திருக்கும்.

2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 21ஆம் திகதி 'றோ' தலைவரான சமந்த் குமார் கோயல் இது போன்றதொரு பயணத்தை நேபாளத்துக்கு மேற்கொண்டிருந்தார். இரகசியமாக தனி விமானத்தில் சென்ற அவர், அப்போது பிரதமராக இருந்த ஷர்மா ஒலியைச் சந்தித்து பேச்சு நடத் தியிருந்தார். அந்த தகவல் வெளியான போது, எதிர்க்கட்சிகளிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

அந்த நிலையில், நேபாள பிரதமர் அலுவலகம், 'நேபாளம் இந்தியா இடையேயான நட்புறவை நிலைத்திருக்க செய்யவும், இரு நாடுகளுக்கிடையேயான பிரச்சினைகளை பேச்சு வார்த்தையின் மூலம் தீர்க்கவும், ,ருதரப்பு ஒத்துழைப்பிற்கும் 'றோ' தலைவர் உறுதியளித்தார்' என செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டு அந்த விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

இரகசியமாக பேசப்பட்ட எந்த விடயத்தையும் நேபாள பிரதமர் அலுவலகம் வெளியிடவில்லை. எனினும், வெளிப்படைத்தன்மை பேணப்பட்டதாக காட்டிக் கொண்டது. இந்த விவகாரத்தில் நேபாளத்துடன் ஒப்பிடும் அளவுக்கு இலங்கை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் இருக்கவில்லை. சந்திப்புக் குறித்து அதிகாரபூர்வமாக இன்னும் உறுதிப்படுத்தவுமில்லை. தகவல்கள் வெளியிடப்படவுமில்லை.

இராணுவ மற்றும் புலனாய்வு தொடர்பான தகவல்களை தேசிய பாதுகாப்புச் சபையில் மாத்திரம் வெளியிடுவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

பாதுகாப்புடன் தொடர்புடைய எல்லா தகவல்களும் இரகசியமானவை அல்ல. பாராளுமன்றத்துக்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்களும் உள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற ஜனநாயகத்தை மதிப்பவராக இருந்தால், அது பற்றி அவர் பாராளுமன்றத்துக்கு தகவல் வெளியிட்டிருப்பார். பாதுகாப்புச் சபைக்குக் கூட அவர் சந்திப்பு விபரத்தை வெளிப்படுத்தினாரா என்ற சந்தேகம் உள்ளது.

ஏனென்றால், பாதுகாப்புச் சபையில் விளக்கமளிப்பேன் என்று கூறியிருக்கிறாரே தவிர, பாதுகாப்புச் சபைக்கு தெரியப்படுத்தியிருக்கிறேன் என்று கூறவில்லை.

இந்தளவுக்கும் பாதுகாப்புச் சபைக் கூட்டம் ஒவ்வொரு வாரமும் கூட்டப்படுகிறது. சந்திப்பு இடம் பெற்ற பின்னர், குறைந்த்து 3 முறையாவது அது கூடியிருக்கும்.

இந்தியப் புலனாய்வுத் துறை தலைவர், கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டு சந்திப்பை நடத்தியது சாதாரண விடயமாக இருக்காது என்பதை அனைவராலும் புரிந்து கொள்ள முடியும். ஆனாலும் அரசாங்கம் எதையோ மறைப்பதற்கு முனைகிறது.

சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள உறவுகள் மீது இந்தியாவுக்கு இருக்கும் சந்தேகங்களும், இந்தியப் பெருங்கடலை நோக்கிய சீனாவின் முனைப்புகளும், இந்திய சீனா எல்லையில் காணப்படும் பதற்றங்களும், புதுடில்லியை விழிப்பு நிலையிலேயே வைத்திருக்க தூண்டுகிறது.

இவ்வாறான நிலையில், சீனா விவகாரத்தில் இலங்கை எடுத்து வைக்க கூடிய ஒவ்வொரு காலடியும் கவனமானதாக இல்லாவிட்டால், புது டில்லி கடிவாளம் போடத் தயங்காது.

'றோ' தலைவர் கொழும்பு வந்து, ஒரு மாதத்துக்குள் இந்தியக் கடற் படைத் தளபதியின் பயணம் இடம் பெற்றிருக்கிறது. இதனை வெறும் சம்பிரதாய பூர்வமானது என வரையறுத்துக் கொள்ள முடியாது. அதற்கும் அப்பால் இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான கரிசனைகளையே வெளிப்படுத்துகிறது.


## இலங்கைத்தீவு மீதான இந்தியாவின் நகர்வு நிரந்தரமான வெற்றியைக் கொடுக்குமா?


(20ம் பக்கத் தொடர்ச்சி) தென்னிலங்கை ஆட்சியாளர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். 1987 இல் ஏற்பட்ட நெருக்கடி போன்றதல்லாது விட்டாலும் தற்போதைய நெருக்கடி அதற்கு சமமானதே. அது கடும்போக்கினால் கையாளப்பட்டது. இது மென்போக்கினால் கையாளப்பட்டது. அதனை விட இது தென்னிலங்கையால் இன்னோர் அடி மேல் சென்று கையாளப்படுகிறது. அது அமெரிக்க பிரசன்னத்தை தடுப்பதற்கானது. இது சீனாவின் செல்வாக்கை தடுப்பதற்கானது. அது உடன்பாட்டினால் சரி செய்யப்பட்டது. இது ஒத்துழைப்பினால் சரி செய்யப்பட்டுள்ளது. அதன் விளைவும் இதன் விளைவும் ஒரே தன்மையை நோக்கி நகரவே வாய்ப்பு அதிகமுள்ளதாக தெரிகிறது.

ஆனால் இதில் இந்தியாவும் சரி, நென்னிலங்கையும் சரி தமது தரப்பு நோற்றுவிடக் கூடாதென்பதில் கவனம் கொண்டு செயல்படுகின்றன. அதேநேரம் தென்னிலங்கை இந்தியாவின் விடயத்தை கையாண்டது போல் தமிழர் தேசிய இனப் பிரச்சினையையும் கையில் எடுத்துள்ளது. ஒன்றால் இன்னொன்றை தென்னிலங்கை கையாள முனைகிறதாகவே தெரிகிறது. அதற்கான உத்திகள் வரையப்பட்டுள்ளதுடன், எதிர்கால பெரும்பான்மை நேசிய எழுச்சிக்கு இவை இரண்டையும் உரமாக்க முயல்வதாகவே தெரிகிறது. அதற்கு வாய்ப்புக் கொடுக்காத சூழலை நோக்கி நகர தென்னிலங்கை ஆட்சியால் முடியுமா என்பது பிரதான கேள்வியாகும். அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படாது கையாளப்படுவதே அவசியமானது.

எனவே இந்தியாவின் வெற்றிகரமான நகர்வு தென்னிலங்கை ஆட்சியாளர்களால் எதிர்கொள்ளப்படும் சூழல் ஏற்படும். சீனாவுடனான நட்புறவை முதன்மையாகக் கொண்டே இந்தியாவுக்கான அழைப்புகளும் ஒத்திகைகளும் நிகழ்கிறது. சீனா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவுவதையும் நெருக்கமான நட்புறவை வெளிப்படுத்துவதிலும் கரிசனை காட்டிக்கொண்டு செயல்படுகிறது. இதில் மீளவும் இந்தியா ஏமாற்றமடையப் போகிறதா அல்லது வெற்றிகரமாக தனது நிலையை தக்க வைக்கப் போகிறதா என்பதே தற்போதைய கேள்வியாகும். நரேந்திர மோடி அரசாங்கம் கொவிட் தடுப்பூசி வழங்கிய போதும் பாரியளவான நிதி தென்னிலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவிய போதும் அடுத்து வந்த தென்னிலங்கையின் நகர்வு இந்தியாவுக்கு பெரும் தோல்வியையே ஏற்படுத்தியது. அதனைத் தான் மீளவும் இந்தியா எதிர்கொள்ளுமா என்ற சந்தேகம் நியாயமானதாகவே தெரிகிறது.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?


மேடராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் நல்லபடியாக நடக்கும். யோசனைகளை அலுவலகத்திலும் குடும்பத்திலும் மதிப்பார்கள். குடும்பத்தில் உங்களை பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். தொழில் செய்பவர்கள் உங்கள் வியாபாராத்தை பெருக்கும் காலமிது.


ரிஸபராசி அன்பர்களே! எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதையாகவும், பொறுப்பாகவும் செயல்பட வேண்டும். தங்கள் உடல் நிலை சிறப்பான முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. . தொழில் செய்பவர்கள் முதலீடுகள் செய்யும் போது மனைவியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.


மிதுனராசி அன்பர்களே! மிகுந்த பொருட்செலவில் சுபவிரயங்கள், எடுத்த காரியங்களில் தடை, எதுவுமே நேர்மாறாக இருப்பது என கடந்த காலங்களை மிகுந்த சிரமத்துடன் கழித்தீர்களல்லவா, இனி வரும் காலம் மிகவும் நல்லகாலம். உங்கள் பேச்சை நீங்களே கேட்காமல் இருந்து வந்த நிலைமை மாறும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்த்து பேசுவது நல்லது. துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும்


கடகராசி அன்பர்களே! தடங்கல்கள் அனைத்தும் அகலும். குடும்பத்தில் நல்ல நல்ல விஷயங்கள், விஷேசங்கள் நடக்கும். உங்கள் தைரியத்திற்கு இறைவனை வேண்டுங்கள். பிள்ளைகளின் மேல் கவனம் வைக்க வேண்டும். முன்னோர்களை அமாவாசை தோறும் வழிபடவும். தொழில் செய்பவர்கள் புதிய முதலீடுகள் செய்யும் போது கவனம் தேவை. அனுபவமிக்கவர்களுடன் கலந்து ஆலோசித்து முதலீடு செய்வது நலம்.



சிம்மராசி அன்பர்களே! தீவிர முயற்சியால் தடைபட்டிருந்த திருமணம், கல்வி, என தடையாக இருந்த அனைத்து காரியங்களும் தடைகள் விலகி ஒன்றன் பின் ஒன்றாக சிறப்பாக நடக்கும். குடும்பத்தில் நடை பெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.



கன்னிராசி அன்பர்களே! முயற்சிகளை இரு மடங்காக்குங்கள், வெற்றிகள் உங்களைத் தேடி வரும் காலமிது. உங்கள் பொன்னான நேரத்தை அடுத்தவருக்காக வீணாக்காதீர்கள். அடுத்தவரை பற்றி பேசா விட்டாலும் நீங்கள் கூறியதாக சிலர் பற்ற வைக்க கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது.



துலாம்ராசி அன்பர்களே! நல்ல விஷயங்களை தள்ளிப் போட வேண்டாம். வீடு, மனை, ஆடை, ஆபரணங்கள் போன்ற விஷயங்களில் அவசரம் வேண்டாம். குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். தொழிலில் லாபகரமான முதலீடுகளில் முதலீடு செய்ய தகுதியானவர்களின் ஆலோசனைகளை பெற்று செய்யவும். உத்யோகஸ்தர்களுக்கு பணி செய்யும் இடத்தில் எச்சரிக்கை தேவை.



விருச்சிகராசி அன்பர்களே! கிடைத்தவற்றை வைத்து நிம்மதி அடையும். உங்கள் வாக்கு வன்மை கூடும். உங்கள் பேச்சிற்கு மதிப்பு கிடைக்கும். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகள் செய்ய தயங்க வேண்டாம். தாய் தந்தையரை வணங்கி எந்த காரியத்தையும் ஆரம்பித்தால் வெற்றியே.




தனுசுராசி அன்பர்களே! வீடு, மனை வாங்க தடை, சுபகாரியம் செய்வதற்கு தடை, நற்செயல்கள் எது செய்வதற்கும் இருந்து வந்த தடைகள் நீங்கும். தாயாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.


மகரராசி அன்பர்களே! தைரியமாக எதையும் எதிர் கொள்வீர்கள். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம் கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். மன வலிமை அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். தொழில் செய்பவர்கள் லாபகரமான முதலீடுகளில் யாரையும் நம்பவேண்டாம். நல்ல நண்பர்களால் ஆதாயம் நல்ல மதிப்பு கிடைக்கும்.


கும்பராசி அன்பர்களே! எதிர்பார்த்திருந்த தனலாபம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவர், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் செய்பவர்கள் லாபகரமான தொழில்களில் முதலீடு செய்வது அவசியம்


மீனராசி அன்பர்களே! வருவது வரட்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவீர்கள். இயந்திரங்கள், நீர்நிலைகளில் கவனம் தேவை. சோம்பல் கூடவே கூடாது. குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு நண்பர்கள் உதவிகள் செய்வர். லாபகரமான முதலீடுகள் செய்வீர்கள்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழர் அரசியல் மீண்டும் பலம்...

(19ம் பக்கத் தொடர்ச்சி) தந்திரோபாயமாக சில விடயங்களை முன்னெடுப்பது தவறென்றால், தமிழினத்தின் முதல் துரோகி எஸ்.ஜே.வி.செல்வநாயகமாகத் தானே இருக்க முடியும்? அதற்கு முன்னர் பச்சைத் துரோகமிழைத்தவர் (கஜன் பொன்னம்பலத்தின் பாட்டன்) ஜி.ஜி.பொன்னம்பலமல்லவா?

இயக்கங்களின் வரலாறு என்ன? எந்த இயக்கம் எதிரியென்று கூறப்பட்டவர்களோடு தேவை கருதி ஊடாடாத இயக்கம். இந்திய அமைதிப் படைகளால் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விடுவோமென்னும் சூழலில் தான், அதிலிருந்து, தப்பித்துக் கொள்வதற்காக, விடுதலைப் புலிகள் பிரேமதாசவோடு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டனர்.

2000இல், அன்ரன் பாலசிங்கம், இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் இதனை பச்சையாக போட்டுடைத்திருந்தார். இந்திய அமைதிப்படை வடக்கு கிழக்கு முழுவதையும் கட்டுப்பாட்டுக் கொண்டு வந்திருந்தது. இந்த நிலையில், முழுமையான அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் தான், பிரேமதாசவோடு புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. பின்னர் இந்தியாவின் தேவையை உணர்ந்து, பாலசிங்கம் இந்தியாவை நோக்கித் திரும்பினார்.

**(When we entered into negotiations with President Premadasa> we were on the brink of destruction. The IPKF had taken over the entire north and east and the LTTE and Prabhakaran were fighting for survival. So we entered into an understanding with Premadasa to escape from total annihilation. )**

ஒரு வீழ்ச்சியை எதிர் கொள்ளும் போது, தந்திரேபாயமாக செயற்பட முடியும் — அந்த தந்திரேபாயத்திற்காக எந்தவொரு எல்லைக்கும் செல்லலாமென்பது தானே இதன் பொருள்! இதில் எங்கிருக்கின்றது கொள்கை? எனவே தந்திரேபாயத்தை கொள்கையோடு இணைத்து குழம்பிக் கொள்ள வேண்டியதில்லை என்பது தானே விடயம். இந்த பின்புலத்தில் சிந்தித்தால், கடந்த 73 வருடகால தமிழ் தேசிய அரசியலில் கொள்கை வழியை மட்டுமே முன்னிறுத்தி சிந்தித்த கட்சிகளும் இல்லை, இயங்கங்களும் இல்லை. சூழ்நிலை கருதிய முடிவுகளுக்கு எவருமே தங்கவில்லையென்பது தான் வரலாறு. இப்போது புதிதாக தமிழ்-தேசிய வகுப்பெடுப்போர், இந்த அடிப்படையில் விவாதிப்பதற்கு தயாராக இருக்கின்றீர்களா? விவாதிப்போமா? இந்தக் கட்டுரை துனிவுள்ளவர்களை அழைக்கின்றது.

நாம் ஒவ்வொரு விடயங்களை உச்சரிக்கின்ற போதும், நாம் நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய அரிவரிக் கேள்வி நாம் கூறும் விடயத்தை எவ்வாறு அடையப் போகின்றோம்? அதற்கான பலத்தை எவ்வாறு திரட்டிக் கொள்ளப் போகின்றோம்? அதனை எங்களால் திரட்டிக் கொள்ள முடியுமா?

விடுதலைப் புலிகள் இராணுவ நிலையில் பலமாக இருந்த காலத்தில் கூட, நிலைமைகள் பாரதூரமாவதை உணர்ந்த பாலசிங்கம், இந்தியாவை நோக்கித் திரும்பினார். உண்மையில் பால சிங்கத்தை இன்று நினைவு கூறுவோர் எவருமே அவரது இறுதிக் கால நகர்வுகள் தொடர்பில் பேசுவதில்லை. பலத்தோடு இருந்த காலத்திலேயே ஒரு கட்டத்திற்கு மேல் எதனையும் முன்னெடுக்க முடியவில்லை. பேச்சு வார்த்தையிலிருந்து பிரபாகரன் வெளியேறிய பின்னர், நிலைமைகள் மிகவும் வேகமாக அவருக்கு எதிராகத் திரும்பியது.

ஒரு கட்டத்தில் அனைத்துமே கை மீறியது. விடுதலைப் புலிகள் பலத்தோடு இருக்கின்ற காலத்திலேயே எதிர்கொள்ள முடியாத விடயங்களை, இன்று எந்தவிதமான பலமுமில்லாத சூழலில் எவ்வாறு நம்மால் முன்னெடுக்க முடியும்

அதற்காக இந்தக் கட்டுரை இலக்கை கை விடுமாறு வாதிடவில்லை. மாறாக, இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, எடுப்பதை எடுத்துக் கொண்டு, முன்னேறுவோமென்றே வாதிடுகின்றது. நம் கனவுகளை சேமித்து வைப்போம். மீண்டும் பலம்பெ றும் காலமொன்று வரும் போது, அந்தச் சேமிப்பை கவனமாகப் பயன்படுத்துவோம். வரலாறு முழுவதிலும் — இவ்வாறு தான் வீழ்ந்த சமூகங்கள், எழுந்திருக்கின்றன.

# கஜேந்திரகுமாரிடமுள்ள மாற்று வழி?

(5ம் பக்கத் தொடர்ச்சி) இது தவறு - துரோகமென்று கூறி, அனைத்தையும் நிராகரிப்பதாயின் - அதாவது, தென்னிலங்கை சமஷ்டியை வெளிப்படையாக அறிவித்தால் மட்டுமே நாங்கள் பேசுவோம் என்று ஒற்றைக்காலில் நிற்பதாயின் அதற்கான பலத்தை தமிழர்கள் முதலில் நிரூபிக்க வேண்டும். அவ்வாறானதொரு பலத்தை நிரூபிப்பதற்கு கஜேந்திரகுமார் இது வரையில் செய்தது என்ன? கஜேந்திரகுமாரும் கூட்டமைப்பினரை போன்றே பாராளுமன்ற விவாதங்களில் பங்கு கொண்டு தனது வாதங்களை முன் வைக்கின்றார். அவர்களைப் போன்று ஊடக சந்திப்புக்களை நடத்துகின்றார் - அறிக்கைகளை வெளியிடுகின்றார். இவற்றின் மூலம் தென்னிலங்கையின் மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த முடியுமா? எந்தவொரு மாற்று வழியையும் முன் வைக்காமல், அதனை செயல்வடிவில் காண்பிக்காமல், வெறுமனே கூட்டமைப்பின் அனைத்து நகர்வுகளையும் எதிர்த்துக் கொண்டிருப்பதன் பொருள் என்ன? இதனை மாற்று அரசியலென்று கூறலாமா?

# கனடிய கோடீஸ்வரத் தம்பதிகளின் கொலை.....

தென்னி(4ம் பக்கத் தொடர்ச்சி) ஆகியோரின் மரணத்திற்கு காரணம் யார் என்பது குறித்து தகவல் அளித்தால் 35 மில்லயன் டொலர் பரிசு தொகையாக வழங்கப்படும் என்றும் பேரி ஷெர்மனின் குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

ஐந்து ஆண்டுகளாக குற்றவாளி பற்றி எந்தவித துப்பும் கிடைக்காமல் இருக்கும் சூழலில், பேரி மற்றும் ஹனி ஆகியோரின் மரணத்தால் அவரது மகன் மற்றும் குடும்பத்தினர் மீளாத் துயரில் இருந்து வருகின்றனர். மேலும் இதற்கான காரணத்தை கண்டு பிடிக்க தனியாக துப்பறியும் அதிகாரிகளை நியமித்து அவர்கள் விசாரித்தும் வருகின்றனர். பேரி மற்றும் ஹனி ஆகியோர் இறப்பதற்கு முன்பாக அப்பகுதியில் உலாவிய நபர் குறித்து சிசிடிவி காட்சிகள் உள்ளன. ஆனால் அவர் யார் என்பதை இன்னும் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாநகரசபையின் வரவு செலவு தோற்கடிப்பு!

(16ம் பக்கத் தொடர்ச்சி) கருதி எதிர்காலத்தில் செல்வாக்கை அதிகரிக்கலாம் என எண்ணி இந் வரவுசெலவினை தோற்கடித்தனர். என்னை முதல்வர் பதவியில் அகற்றமுடியும் என என்னியிருக்கலாம். இது தாங்களின் வளர்ச்சிக்காவும், அழிந்து செல்லுவதற்காவும் இருக்கலாம். இதற்கு காலம் தான் பதில் சொல்லும் என்று தெரிவித்தார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**

Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய
கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.